Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
MONDAY, DECEMBER 09, 2023

திங்கட்கிழமை டிசெம்பர் 09, 2024 | ஒளி: 10 கதிர்: 110 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# உப்பு இறக்குமதிக்கு அனுமதி கோரல்



உப்பு உற்பத்தியின் போது, ஏற்படும் நடைமுறை சிக்கல்களை முன்வைத்து நிறுவனங்கள் இந்த அனுமதியை கோரியுள்ளதாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில்

# சட்டமா அதிபரிடம் ஆலோசனை



**உயர் நீதிமன்றத்தின் உத்தரவின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும்**

**கடந்த காலத்தில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் கட்சி மாறியுள்ளதாக அமைச்சுக்கு தகவல் கிடைத்துள்ளன.**

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு சட்டமா அதிபருக்கு கடிதம் எழுதி ஆலோசனை கோரியுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பில் ஏதேனும் சட்டத் தடைகள் இருப்பின் அது தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதே இதன் நோக்கம் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மாகாணசபை இடைத்தேர்தல் தொடர்பில் முன்னர் கோரப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கு அரசாங்கம் தீர்மானம் எடுத்திருந்தால், உடனடியாக அதனை நிறைவேற்றுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

பழைய வேட்பு மனுப் பட்டியல் இரத்து செய்யப்பட்டால், பாராளுமன்றத்தில் சட்டமூலம் நிறைவேற்றப்பட வேண்டும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் தொடர்பாக கோரப்பட்டுள்ள பழைய வேட்பு மனுப் பட்டியலை ரத்து செய்ய அமைச்சரவை அண்மையில் தீர்மானித்தது. அந்த முடிவை அரசாங்கம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கடந்த வாரம் அதிகாரப்பூர்வமாக அறிவித்திருந்தது.

இதேவேளை, உயர் நீதிமன்றத்தின் உத்தரவின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# தேங்காய்களின் எண்ணிக்கை சதொசவில் அதிகரிப்பு

சதொச ஊடாக விற்பனை செய்யப்படும் தேங்காய்களின் எண்ணிக்கை திங்கட்கிழமை (09) இரண்டு இலட்சமாக அதிகரிக்கப்படும் என வர்த்தக, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்திற்குச் சொந்தமான தென்னந்தோப்புக் காணிகளிலுள்ள தேங்காய்கள் சதொச ஊடாக விற்பனை செய்யப்படுவதாகவும், கொழும்பு உள்ளிட்ட நகர்ப்புறங்களில் உள்ளவர்கள் சதொச நிறுவனத்திடமிருந்து தேங்காய்களை கொள்வனவு செய்ய முடியும் எனவும் அமைச்சு மேலும் குறிப்பிடுகிறது.

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில்

# சர்வதேச விசாரணையே அவசியம்



வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் உள்ளகப் பொறிமுறையை நிராகரிப்பதோடு, தொடர்ந்தும் சர்வதேச விசாரணையை வலியுறுத்துகின்றோம் என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

# ‘தேங்காய்’ எதிரிகளுடன் வெளிநாட்டவர் மகிழ்ச்சி

*பாலித ஆரியவன்ச*

நாட்டில் தேங்காய்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. தேங்காய் ஒன்று, 220 ரூபாய் முதல் 300 ரூபாய் வரைக்கும் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு சில கடைகளில் அரை மூடி தேங்காயும் தற்போது விற்பனை செய்யப்படுகிறது. தேங்காய் சம்பலை காணக்கிடைப்பது அரிதாகவே உள்ளது.

தேங்காய் தட்டுப்பாட்டுக்குப் பிரதான காரணமாக குரங்குகளைப் பலரும் குற்றஞ்சாட்டுகின்றனர். பாராளுமன்றத்தில் அண்மையில் உரையாற்றிய விவசாயம், கால்நடை வளர்ப்பு அமைச்சர் லால் காந்த “குரங்கு பயங்கரவாதம்” நாட்டில் தலைதூக்கி விட்டது எனக் குறிப்பிட்டிருந்தார்.

எனினும், குரங்குகள் தேங்காய்களை உண்பதால் தேங்காய் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக இந்த அரசாங்கம் கூறுகிறது . அவ்வாறானால் கடந்த ஆண்டு நாட்டில் குரங்குகள் வாழவில்லையா? எனவே? குரங்குகளைக் குற்றவாளிகளாக்க வேண்டாம் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் எம்.பி.யான டி.வி.சானக கேட்டுக்கொண்டிருந்தார்.





# “எடுத்த எடுப்பிலேயே கத்தியை தீட்டுகின்றனர்”

*எஸ்.அஷ்ரப்கான்*

கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரச்சினை இலகுவாகத் தீர்க்கப்பட வேண்டியது. ஆனால், பிச்சைக்காரனின் புண் போல், அரசியல்வாதிகள் அதை வைத்து அரசியல் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று தேசிய காங்கிரஸின் தலைவர் ஏ.எல்.எம்.அதாவுல்லா தெரிவித்தார்.

அக்கரைப்பற்று கிழக்கு வாசலில் சனிக்கிழமை (07) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரச்சினை என்பது தமிழர்களும் முஸ்லிம்களும் இலகுவாகத் தீர்க்கக்கூடிய பிரச்சினையாகும். இதை

தொடர்ச்சி P2

## சிவனொளிபாதமலை

# பருவகாலம் சனியன்று ஆரம்பம்



சிவனொளிபாதமலை பருவகாலம் எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பமாகி, அடுத்த வருடம் மே மாதத்தில் நிறைவு பெறவுள்ளது.

இந்த பருவ காலத்தில் மலைக்கு தரிசனத்திற்கு செல்லும் யாத்திரிகர்கள் பொலித்தீன்,

தொடர்ச்சி P2

# விந்தன் கனகரத்தினம் இடைநிறுத்தம்



*அகரன்*

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமைக் குழு உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் கட்சியில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்த பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து விளக்கம் கோரி கடிதம் அனுப்புவதற்கு தலைமைக் குழு தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2

## டிப்போ பாதுகாப்பு உத்தியோகத்தர் படுகொலை

# காசாளர், சாரதி உட்பட மூவருக்கு விளக்கமறியல்

*ரஞ்சித் ராஜபக்ஷ*



நுவரெலியா-லங்கம டிப்போ பாதுகாப்பு உத்தியோகத்தரை கொலை செய்த சந்தேக நபர்கள் மூவரையும் கைது செய்த நுவரெலியா பொலிஸார், அவர்களை நீதிமன்றத்தில் முன்னிறுத்தியுள்ளனர். அப்போது, சந்தேக நபர்கள் மூவரையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நுவரெலியா லங்கம டிப்போவில் காசாளராகப் பணிபுரிந்த ராஜபக்ஷ (55),

தொடர்ச்சி P2

# ஔடத அதிகாரிக்கு கட்டாய விடுமுறை

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் மருந்து மதிப்பீட்டு அதிகாரி துஷார ரணதேவ உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையால் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளார். இவர், மருந்தாளுநர் சங்கத்தின் தலைவராகவும் உள்ளார்.

மருந்து கட்டுப்பாட்டு அதிகார சபையின் இரகசிய தகவல்கள் வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்படுவதாக அதிகார சபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பிரகாரம் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தலைவர் டொக்டர் ஆனந்த விஜேவிக்ரமவினால், அவர், கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளார்.

மருந்து மதிப்பீட்டு அதிகாரி துஷார ரணதேவ பயன்படுத்திய அனைத்துப் பொருட்களையும் ஒப்படைக்க வேண்டும் எனவும்,

தொடர்ச்சி P2

# வடக்கு, கிழக்கில் புதன் முதல் மழை

தென்கிழக்கு வங்காள விரிகுடா கடற்பிராந்தியத்தில் நிலவும் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை இலங்கையில் சில பிரதேசங்களில் தாக்கத்தை ஏற்படுத்துமென இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் செவ்வாய்க்கிழமை(10) முதல் பலத்த மழை பெய்யுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. இதனால் ஏதேனும் அனர்த்தங்கள் ஏற்படும் பட்சத்தில் அவற்றை எதிர்கொள்வதற்கான உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்காக விசேட கலந்துரையாடலை நடத்தியதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம், ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் உதய ஹேரத் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சட்டமா அதிபரிடம் ஆலோசனை



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 340 உள்ளூராட்சி மன்றங்களுக்கான 8,711 வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காக வேட்புமனுக்கள் கோரப்பட்டன. அதன்படி, 80,672 வேட்பாளர்கள் அந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பு மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

24 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 275 உள்ளூராட்சி சபைகளுக்கு இவர்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்தவர்களில் சுமார் மூவாயிரம் அரச ஊழியர்கள் உள்ளனர். வேட்புமனு தாக்கல் செய்த இவர்களில் சுமார் 8,000 பேர் வெளிநாடு சென்றுள்ளனர் அல்லது உயிரிழந்துள்ளனர் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனிடையே கடந்த காலத்தில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் கட்சி மாறியுள்ளதாக அமைச்சுக்கு தகவல் கிடைத்துள்ளன. எல்பிட்டிய தவிர்ந்த அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் தற்போது ஆணையாளரின் கட்டுப்பாட்டில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உப்பு இறக்குமதிக்கு அனுமதி கோரல்

இது தொடர்பில் தொழில் அமைச்சுடன் கலந்துரையாடி இறுதி தீர்மானம் எடுக்கப்படுமென அமைச்சர் கூறினார்.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை உப்பு நிறுவனத்திடம் வினவிய போது, தற்போது 12 மெட்ரிக் தொன் உப்பு கையிருப்பில் உள்ளதாக நிறுவனத்தின் பொது முகாமையாளர் ஆர்.எம்.குணரத்ன தெரிவித்தார்.

இந்த உப்பு தொகை எதிர்வரும் 2 மாதங்களுக்கு போதுமானது என அவர் கூறினார்.

மழையுடனான வானிலையால் கடந்த காலங்களில் உப்பு உற்பத்தி குறைவடைந்ததாக ஆர்.எம்.குணரத்ன தெரிவித்தார்.

எதிர்வரும் நாட்களில் மழையுடனான வானிலையால் உப்பு உற்பத்திக்கு ஏற்படும் சிக்கல்களை கருத்திற்கொண்டு உப்பு இறக்குமதிக்கான அனுமதி கோரப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தற்போது நுகர்விற்கு தேவையான உப்பு நாட்டில் கையிருப்பிலுள்ளது.

எனினும், உப்புக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்து விலையை சிலர் வெகுவாக அதிகரித்துள்ளதாக இலங்கை உப்பு நிறுவனத்தின் பொது முகாமையாளர் சுட்டிக்காட்டினார்.





# "எடுத்த எடுப்பிலேயே கத்தியை தீட்டுகின்றனர்"

முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல்வாதிகள், தேர்தல் காலங்களில் இரண்டு பக்கத்திலும் இந்த விடயத்தைச் சூடாக்கி விடுவார்கள்.

தேர்தல் முடிந்த பிறகு, இந்த விடயம் அமைதியாகிவிடும். இப்பொழுது பாராளுமன்றத்திற்குச் சென்றவர்கள் ஏதாவது கதைக்க வேண்டும் அதுதான் ஆரம்பித்திருக்கிறார்கள். பிஸ்மில் சொல்லும்போது நல்ல விடயம் ஒன்றில் தொடங்குவது தானே. ஆனால், எடுத்த எடுப்பிலேயே போய் கூர்மைப்படுத்திக் கத்தி தீட்டுகின்ற வேலையை தான் இவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அதை நாங்கள் பேசித் தீர்ப்போம் என்று சொல்வதற்கு யாரும் இல்லை. ஆனால், நாங்கள் இருக்கிறோம். நாங்கள் அதைத்தான் யோசிக்கிறோம். எங்களால் இந்த பிரச்சினையை பேசித் தீர்க்க முடியும். ஆகவே, இந்த விடயம் அவர்களுக்குத் தேர்தலுக்குரிய வியூகம்.

கல்முனையில் தமிழர்களையும் முஸ்லிம்களையும் மோத வைத்துவிட்டு அவர்கள் அதில் குளிர் காய்வது அவர்களது வியூகம். இந்த பிரச்சினையை முடிப்பதென்றால் எப்பொழுதோ அது முடிந்திருக்க வேண்டும்.

கல்முனை தமிழ் மக்களோ, முஸ்லிம் மக்களோ கத்தியை வைத்துக் கொண்டு வாழ்வதற்கு விரும்பவில்லை. அது சாதாரணமாக ஒரு எல்லை சம்பந்தமான விடயம் மாத்திரமே. இதனை இலகுவாகத் தீர்க்க முடியும். தீர்ப்பதற்கு அந்த பிராந்தியத்தின் உடைய அரசியல்வாதிகளும் அதற்கு பொறுப்பாக இருக்கின்ற அரசியல்வாதிகளும் இணங்க வேண்டும். மாறாக இந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர்கள் விரும்புவதில்லை பிச்சைக்காரனின் புண் போல் அது அப்படியே இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள் என்றார்.

# விந்தன் கனகரத்தினம் இடைநிறுத்தம்

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமைக் குழு கூட்டம் வவுனியா இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் சனிக்கிழமை (07) இடம்பெற்றது.

இதன்போது, கட்சியின் உள்வீட்டுத் தகவல்களை வெளிப்படுத்தியதாகத் தெரிவித்து விந்தன் கனகரத்தினம் மீது உறுப்பினர்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதையடுத்து அவரை கட்சியில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தி அவரிடம் இருந்து விளக்கம் கோருவதாக தலைமைக் குழு தீர்மானித்துள்ளது.

இதேவேளை அவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு சில உறுப்பினர்கள் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர். குறித்த தீர்மானத்தை அடுத்து விந்தன் கனகரத்தினம் கூட்டத்தில் இடைநடுவில் வெளியேறிச் சென்றுள்ளார்.

இதேவேளை, கட்சியின் தீர்மானத்தை மீறி கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு அளித்தமைக்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கத்திடம் விளக்கம் கோரி கடிதம் அனுப்ப உள்ளதாகவும் தலைமைக் குழு தீர்மானித்துள்ளது.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் யாழ்தேர்தல்மாவட்டத்தில் வேட்பாளரைப் பெயரிடும் விடயம் தொடர்பாக சுரேன் குருசாமி, குகதாஸ் ஆகியோரிடமும் விளக்கம் கோரி கடிதம் அனுப்பவுள்ளதாக தலைமைக் குழு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# காசாளர், சாரதி உட்பட மூவருக்கு விளக்கமறியல்

அந்த டிப்போவில் சாரதியாகப் பணியாற்றிய பிரேகித் சஞ்சீவ விரசிறி (40) மற்றும் சந்தேகத்திற்குரிய சாரதியான நண்பரான சம்பத் ஜானக பண்டார (36) ஆகியோரே விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

நுவரெலியா டிப்போவில் காவலாளியாக பணியாற்றிய ஏ.லோகநாதன் (85) என்பவரை வெள்ளிக்கிழமை (06) அதிகாலை 02 மணியளவில் டிப்போவின் பாதுகாப்புச் சாவடி வைத்து கொலை செய்து விட்டு, டிப்போவின் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த பணத்தை சந்தேக நபர்கள் மூவரும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். இச் சம்பவம் தொடர்பில் நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் பேரில், டிப்போவின் காசாளர் தனது டிப்போ காவலாளியைக் கொன்று, டிப்போவில் உள்ள அலமாரியின் அலமாரியில் இருந்த பத்து லட்சத்து ஐம்பத்து ஆயிரத்து நூற்று அறுபத்தேழு ரூபாய் பணத்தை திருடிச் சென்றுள்ளார்.


நுவரெலியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுருத்த ஹக்மான, நுவரெலியா பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர், நுவரெலியா பொலிஸார், நுவரெலியா பொலிஸ் பிரிவின் களப் பரிசோதனை உத்தியோகத்தர்கள் நுவரெலியா மற்றும் ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் நாய்ப் பிரிவினரின் உதவியுடன் இக்கொலை தொடர்பான விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

விசாரணைகளின் போது, டிப்போவில் பணியாற்றிய காசாளர் கைது செய்யப்பட்டதுடன் கொலை மற்றும் கொள்ளையில் தெரியவந்த தகவலின் அடிப்படையில் டிப்போவின் சாரதியும் கொலையில் ஈடுபட்ட அவரது நண்பரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரின் சாரதியின் நண்பர் மஹவ கிராபே பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் பதுங்கியிருந்த போது, நுவரெலியா பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று அப்பகுதிக்குச் சென்று சந்தேக நபரைக் கைது செய்து விசாரணையின் போது அறு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து ஐந்நூறு ரூபா, கொலைக்குப் பயன்படுத்திய கத்தி, கையுறை மற்றும் அவர் கடைசியாக அணிந்திருந்த ஆடைகள் அவரது தோட்டத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த டிப்போவுக்குச் சொந்தமான மூன்று இலட்சத்து நான்காயிரத்து அறுநூற்று அறுபத்தேழு ரூபாய் பணத்தைக் குறித்த டிப்போவின் சந்தேகநபர் காசாளர் சில காலமாக முறைகேடாகப் பயன்படுத்தியதாகவும், சந்தேகத்திற்குரிய காசாளரால் அடமானம் வைக்கப்பட்ட ஒன்றரை பவுன் தங்க நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

நுவரெலியா லங்காம டிப்போவிற்கு சொந்தமான மூன்று இலட்சத்து நாலாயிரத்து அறுநூற்று அறுபத்தேழு ரூபாய் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்த பணத்தை ஈடு செய்வதற்கே இந்தக் கொலை திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.




# பருவகாலம் சனியன்று ஆரம்பம்

பிளாஸ்டிக் போத்தல்கள் உள்ளிட்ட உக்காத பொருட்களைக் கொண்டு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் சட்ட விரோதமான எவ்விதமான செயல்களிலும் ஈடுபட வேண்டாம் எனவும், 24 மணித்தியாலங்களும் பாதுகாப்பு அதிகாரிகள் சிவில் உடையில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சீரற்ற காலநிலையினால்



நீர்த் தேக்கங்களின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ள நிலையில் நீர்த்தேக்கங்களில் நீராட வேண்டாம் எனவும் நீராடுவதற்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டுமே நீராடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# சர்வதேச விசாரணையே அவசியம்



யாழ். ஊடக அமையத்தில் சனிக்கிழமை(07) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட் டோரின் உறவினர்களின் சங்கத்தினரால் ஊடக அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது.

அந்த அறிக்கையில், "நாம் ஒரு தேசிய இனம். ஆனால், தொன்று தொட்டு சிறுபான்மையினம் என்ற பதத் துக்குள் திட்டமிட்டுத் தள்ளப்பட்டுள்ளது எம். தமிழினம். இன்றும் தமது பிள்ளைகளையும், கணவன்மார்களையும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பரம்பரையில் முதல் வரி சையில், மனம் தளர்ந்து வெந்து கொண்டி ருக்கும் உறவுகளாக, வடக்கு/கிழக்கில் ஏங் கிக்கொண்டிருக்கும் தமிழினமாக வாழ்ந்து வருகின்றோம்.

இன்று எமது எட்டு மாவட்டத்திலுமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் எண்ணிக்கை 18,817 பேர் ஆவர். அதுமட்டு மல்லாமல், 2009இல் முள்ளிவாய்க்காவலில் நடைபெற்ற இறுதி யுத்தத்தின்போது எமது மக்கள் மீது பாரிய இனவழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 146,679 பேரைப் பலியெடுத்துள்ளது. நாம் எமது உறவுகளை இறுதி யுக்கத்தில் இழந்து தவிக்கின்றோம்.

இன்று எமது எட்டு மாவட்டத்திலுமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் எண்ணிக்கை 18,817 பேர் ஆவர். அதுமட்டு மல்லாமல், 2009இல் முள்ளிவாய்க்காவலில் நடைபெற்ற இறுதி யுத்தத்தின்போது எமது மக்கள் மீது பாரிய இனவழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 1,46,679 பேரைப் பலியெடுத்துள்ளது. நாம் எமது உறவுகளை இறுதி யுத்தத்தில் இழந்து தவிக்கின்றோம். காணாமல் போனோர் அலுவலகம் ஒன்றை 2015ஆம் ஆண்டு நிறுவினார்கள். இதில் எமக்கு நம்பிக்கை இல்லை. காரணம் நாம் கொடுத்த ஆவணங்களுக்கு இன்று வரை பதில் இல்லை. மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப் பட்ட எவரும் கண்டுபிடிக்கப்படவில்லை.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவு களின் தாய்மார்களுக்கு ஒரு இலட்சம் அல்லது ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பணம் வழங்கியும் மரணச் சான்றிதழ் கொடுத்தும் நீதி வேண்டிய போராட்டத்தை முடித்து விடத் துடிக்கிறது இலங்கை அரசு. அதுமட்டுமல்ல, இந்த ஓ.எம்.பி. வடக்கு, கிழக்கு மக்களின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளாகிய எமது பிரச்சினைகளை ஒரு பொருட்டாகப் பார்க்கவில்லை என்பதை நாம் இலங்கை அரசின் செயற்பாடுகளில் காணக் கூடியதாக இருக்கின்றது.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் உரையிலேயே தமிழருக்கான இன அடையாளம் மறுக்கப்பட்டுள்ளது. எல்லோரும் ஒட்டுமொத்த இலங்கை மக்கள் என்று அவர் கூறியுள்ளார். நாம் ஒரு தமிழ்த் தேசிய இனம் என மீள வலியுறுத்துவதுடன், உள்நாட்டின் எந்தவொரு பொறி முறையையும் ஏற்கப்போவதில்லை எனவும் வலியுறுத்துவதுடன், நாம் சர்வதேச நீதிப் பொறிமுறை ஊடாக நீதி வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றோம்" என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஔடத அதிகாரிக்கு கட்டாய விடுமுறை

எந்தவொரு விடயத்திற்காகவும் தனது அனுமதியுடன் தான் நிறுவன வளாகத்திற்கு வர முடியும் எனவும் கட்டாய விடுப்பைக் கையளித்துள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், துஷார ரணதேவவின் தனிப்பட்ட கையடக்கத் தொலைபேசியையும் குற்ற புலனாய்வு பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் ரகசியத் தகவல்கள் வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக குற்ற புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி உள்ளிட்ட ஊழல் மிக்க உயர் அதிகாரிகளின் அழுத்தத்திற்கு அடிபணியாத ரணதேவ மோசடி மற்றும் ஊழலை அம்பலப்படுத்தியதாலேயே ரணதேவ இந்த கதியை சந்திக்க நேர்ந்ததாக அதிகார சபையின் ஊழியர்கள் சிலர் தெரிவிக்கின்றனர்.

# வடக்கு, கிழக்கில் புதன் முதல் மழை

சுகாதார அமைச்சு, நீர்ப்பாசனத் திணைக்களம், வளிமண்டலவியல் திணைக்களம், முப்படையின் அதிகாரிகள் என அனைத்து தரப்பினரையும் இணைத்து நிகழ்நிலை ஊடாக கலந்துரையாடல் நடத்தப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையை இடையூறுகளின்றி நடத்தத் தேவையான நடைமுறைகள் தொடர்பிலும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதனிடையே, கடந்த சில தினங்களுக்கு முன்னர் நாட்டில் பெய்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட 431 குடும்பங்களைச் சேர்ந்த 1,462 பேர் தொடர்ந்தும் தற்காலிக முகாம்களில் தங்கியுள்ளனர்.

இவர்கள் 17 முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.



# 108 வீரர்கள் புறப்பட்டனர்

ஐ.நா. அமைதி காக்கும் பணிகளுக்காக இலங்கை விமானப்படையின் ஹெலிகொப்டர் படையணியைச் சேர்ந்த 108 வீரர்கள், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து மத்திய ஆபிரிக்க குடியரசை நோக்கிப் புறப்பட்டனர்.









# “அஞ்ச வேண்டாம்”

மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகளுக்காக வீடுகளுக்கு வரும் கணக்கெடுப்பாளர்களுக்கு தேவையான தகவல்களை வழங்குவதில் அச்சம் கொள்ளத் தேவையில்லை என மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சனத்தொகை கணக்கெடுப்புக்கு வரும் அதிகாரிகளுக்கு சில வீடுகளில் தகவல்கள் வழங்கப்படுவதில்லை என்ற செய்திகள் வெளியாகியுள்ளதாகக் குறித்த திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனோஜா செனவிரத்ன தெரிவித்தார்.

எவ்வாறாயினும், மக்கள்தொகை கணக்கெடுப்பு நடவடிக்கைகள் டிசம்பர்



23ஆம் திகதி நிறைவடையும் என்று எதிர்பார்ப்பதாகப் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

இவ் வருடத்திற்கான மக்கள் தொகை கணக்கெடுப்பு நடவடிக்கைகள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அனோஜா செனவிரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# வத்தளையில் சிக்கிய யாழ்ப்பாண திருடன்

நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளில் நகை திருட்டு சம்பவம் தொடர்பாக நீண்ட காலமாகத் தேடப்பட்டு வந்த பிரதான சந்தேக நபர் வத்தளையில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது பெருமளவு நகைகள், ஆவணங்கள், திருட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள், கைக்குண்டு என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கோப்பாய், மானிப்பாய், சுன்னாகம் பகுதி பொலிஸ் பிரிவுகளில் கடந்த இரண்டு வருடங்களாக துவிச்சக்கர வண்டியில் முகத்தை மறைத்துச் சென்று நூதனமாக நகைகளைத் திருடும் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றன.

குறித்த சம்பவங்கள் தொடர்பில் நீண்ட காலமாகத் தேடப்பட்டு வந்த புங்குடுதீவைச் சேர்ந்த பிரதான சந்தேக நபர் கொழும்பில் தலைமறைவாக இருந்த



நிலையில், யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரின் மனைவி அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 90 பவுன் நகைகள் மீட்கப்பட்டதுடன், திருடிய நகைகளை விற்ற பணத்தில் சந்தேக நபர் கொழும்பில் சொகுசு வீடொன்றைக் கொள்வனவு செய்திருந்தமையும் பொலிஸ் விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

சந்தேக நபரிடமிருந்து திருடப்பட்ட நகைகளை வாங்கிய கொழும்பைச் சேர்ந்த மூன்று பேரும் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# வலம்புரி சங்குடன் ஒருவர் கைது

ரஸீன் ரஸ்மின்

மாதம்பை பகுதியில் விற்பனைக்குத் தயாராக இருந்த சுமார் 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான வலம்புரி மற்றும் பல வகையான மட்டிகளுடன் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை (08) கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் வலம்புரிச் சங்கு மற்றும் ஒருதொகை மட்டிகள் இருப்பதாகக் கிடைக்கப்பெற்ற ரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில், இலங்கை விமானப்படையின் புலனாய்வு அதிகாரிகளின் இதனை உறுதிப்படுத்தியதன் பின்னர், குறித்த பொருட்களைச் சந்தேக நபரிடமிருந்து கொள்வனவு செய்யும் நோக்கில் தம்மால் நியமிக்கப்பட்ட முகவர்களை வைத்து மாதம்பே பிரதேசத்தில் சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து விற்பனை செய்வது மற்றும் தம் வசம் வைத்திருப்பதற்குத் தடைசெய்யப்பட்ட KING CONCH SEASHELL வகையைச் சேர்ந்த மட்டிகளும், CHIRAGA SPIDER CONEH வகையைச் சேர்ந்த வலம்புரிச் சங்கு ஒன்றும், இன்னும் சில மட்டிகளும் (நத்தை) காணப்பட்டதாக இந்த சுற்றிவளைப்பில் ஈடுபட்ட வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், கைது செய்யப்பட்ட சந்தேக





நபரிடம் இருந்து அவர் பயணித்ததாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட வலம்புரிச் சங்கு உட்பட மட்டிகள், மோட்டார் சைக்கிள் என்பன மேலதிக விசாரணைகளுக்காக ஆனவிழுந்தாவ வனவிலங்கு காரியாலய உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# திடீரென தீப்பற்றிய முச்சக்கரவண்டி

ரீ.எல்.ஜவ்பர்கான்

கல்முனை - மட்டக்களப்பு பிரதான வீதியில் காத்தான்குடி பிரதேசத்தில் பயணித்துக்கொண்டிருந்த முச்சக்கர வண்டி திடீரென தீ பற்றி எரிந்துள்ளது.

முச்சக்கர வண்டியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாகவும் குறித்த சம்பவத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த யாருக்கும் எந்தவித ஆபத்தும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேசவாசிகளின் துரித முயற்சியால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# மனைவி, மாமியாரை மண்டியிட வைத்து கொள்ளை

போதைப்பொருள் கடத்தல்காரரைக் கொல்வதற்காக மாறு வேடமிட்டு கடத்தல்காரரின் வீட்டுக்குச் சென்றிருந்த நிலையில் அது நிறைவேறாமையால், அவரது மனைவி மற்றும் மனைவியின் தாயாரைக் முழந்தாலிடச் செய்து, நகை, பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு பொருட்களைக் கொள்ளையடித்த, ஏ.எஸ்.பி. புனைபெயரால் அழைக்கப்படும் குற்றவாளி உட்பட நால்வர் சில மணித்தியாலங்களில் கைது செய்யப்பட்டதாக மொரட்டுமுல்ல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்களுடன் திருடப்பட்ட தங்க நகைகள், கைத்தொலைபேசிகள், கொள்ளைக்குப் பயன்படுத்திய கூரிய ஆயுதங்கள், இரும்பு கம்பி, பாதுகாப்பு தலைக்கவசங்கள், மாறுவேடத்தில் பயன்படுத்திய ஆடைகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மொரட்டுமுல்ல வில்லோரவத்தை பிரதேசத்தில் வசிக்கும் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய நபரைக் கொலை செய்வதற்காகக் கடந்த 6ஆம் திகதி அதிகாலை 2.30 மணியளவில் குறித்த சந்தேக நபர்கள் வீட்டிற்கு வந்து முன்பக்க கதவைத் தட்டியுள்ளனர். கதவைத் திறக்க மறுத்ததால் சமையலறைக் கதவைத் திறந்து உள்ளே நுழைந்துள்ளனர்

அப்போது, கடத்தல்காரர் வீட்டில் இல்லாததால் மாறுவேடத்தில் வந்திருந்தவர்கள் கடத்தல்காரரின் மனைவி மற்றும் மனைவியின் தாயாரை மண்டியிட வைத்துத் தங்க ஆபரணங்கள் மற்றும் சொத்துக்கள் மற்றும் 23,000 ரூபாய் பணத்தைக் கொள்ளையடித்துத் தப்பிச் சென்றுள்ளனர்.

கொள்ளைச் சம்பவம் இடம்பெற்ற சில நிமிடங்களுக்குள் உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்த மொரட்டுமுல்ல பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பிரதான சந்தேகநபரை மொரட்டுவ பஸ் நிலையத்தில் வைத்துக் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, குற்றச் செயல்களுடன் தொடர்புடைய ஏனைய சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபர் ஏ.எஸ்.பி. எனப்படும் புனைபெயரால் அழைக்கப்படும் குற்றவாளி என்றும் மற்றைய சந்தேக நபர்கள் கொலை உள்ளிட்ட பல குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.


சந்தேக நபர்களை மொரட்டுவ நீதவான் நீதிமன்றில் முன்னிறுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் மொரட்டுமுல்ல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் தினேஷ் சந்திரசிறியின் பணிப்புரையின் பேரில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

# விழிப்புணர்வு பேரணி

சர்வதேச மனித உரிமைகள் தினம், டிசெம்பர் 10ஆம் திகதியன்று அனுஷ்டிக்கப்படுகின்றது. அந்த தினத்தை முன்னிட்டு, விழிப்புணர்வு பேரணி, இலங்கை தொழிலாளர் மக்கள் முன்னணியின் தலைவர் சமீர பெரேரா தலைமையில் சனிக்கிழமை (07) இடம்பெற்றுள்ளது.

ஹட்டன்- மல்லியப்பு சந்தியில் இருந்து தனியார் விடுதியொன்று வரை பேரணியாகச் சென்று குறித்த விடுதியில் விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றுள்ளது.











# 90 குடும்பங்களுக்கு உலர் உணவு



பரின்பராஜா சபேஷ்

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கும் வேலைத் திட்டத்தை மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை முன்னெடுத்து வருகிறது.

ஏறாவூர்ப் பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்கும் நிகழ்வு மயில வெட்டுவான் பொதுக் கட்டிடத்தில் சனிக்கிழமை (07) நடைபெற்றது

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சீனித்தம்பி யோகேஸ்வரன் தலைமையில் மயிலவெட்டுவான் பகுதிகளில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, சிவன் அருள் பவுண்டேஷன் மற்றும்

கனடா மொன்றியல் திருமுருகன் ஆலயத்தினால் வழங்கப்பட்ட நிதி உதவியின் மூலம் 90 குடும்பங்களுக்கு உலர் உணவு மற்றும் அரிசி பொதிகள் என்பன வழங்கப்பட்டன.

# சாரணர் தலைவர்களுக்கு விருது வழங்கி வைப்பு



இலங்கை சாரணர் சங்கம் நீண்டகாலம் சேவையாற்றிய சாரணர் தலைவர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு சனிக்கிழமை (07) அன்று அலரி மாளிகையில் நடைபெற்றதுடன், இதில் பிரதம மந்திரி கலாநிதி ஹரிணி அமரசூரிய பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

திருகோணமலை மாவட்ட சாரணர் ஆணையாளர் சிங்காரவேலு சசிகுமார் வெள்ளித்தாமரை விருது பெற்றுக்கொண்டுள்ளார்

இந்த நிகழ்வில், பிரதம சாரணர் ஆணையாளர் சட்டத்தரணி ஜனத்பிரித் பெர்னாண்டோ உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# தோணி கவிழ்ந்ததில் இளைஞன் பலி

செல்ல கதிர்காமம் இருபது ஏக்கர் ஏரியில் வினோதமாகத் தோணியை ஓட்டிக் கொண்டிருந்த நான்கு இளைஞர்களுடன் தோணி கவிழ்ந்ததில் இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

20 ஏக்கர் பகுதியைச் சேர்ந்த திசாநாயக்க முதியன்செலாவைச் சேர்ந்த சாமோத் தில்ஷான் என்ற 19 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் கதிர்காமம் வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் பிரேதப் பரிசோதனை அறிக்கைக்காக ஹம்பாந்தோட்டை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.


## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) பிரிவின் பிரகாரம், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் குறிப்பிடப்பட்ட மூலதனத்தின் குறைப்பு தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்.

**கம்பனியின் பெயர்:** மன்ஸ்ராம் (சிலோன்) (பிரைவட்) லிமிட்டட்
**கம்பனியின் பதிவு இலக்கம்:** பீவீ 17746
**கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி:** இல. 25, ரைன்லேண்ட் பிளேஸ், கொழும்பு 03.
**குறைக்கப்படுவதற்கு முன் கூறப்பட்ட மூலதனம்:** ரூ. 208,000.00
**குறைக்கப்பட்டதன் அடிப்படையில் கூறப்பட்ட மூலதனம்:**
ரூ. 40/= குறைப்புத் தொகை: ரூ.207,960.00

**டீ எஸ் கோர்ப்பரேட் சர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் செயலாளர்கள்**
**இல. 302 ஏ, ரைகம, பண்டாரகம.**

# சமூக ஊடகங்களுக்கு அடிமையாகி இருக்கக் கூடாது

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் 1949 டிசெம்பர் 2ஆம் திகதியன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி, டிசெம்பர் 2ஆம் திகதி அடிமைத்தனத்தை ஒழிப்பதற்கான சர்வதேச தினமாகும். நவீன உலகில் அடிமைத்தனம் என்பதைச் சிந்திக்க முடியாதுள்ளது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு, 'அடிமை' என்ற சொல் ஒரு மனிதன் ஒரு மிருகத்தைப் போல மற்றொரு மனிதனின் பொருளாக மாறுவதைக் குறிக்க உருவாக்கப்பட்டது. ஆபிரிக்க அடிமைகளை அவர்களின் தேவைக்கேற்ப வாங்கி கப்பலில் ஏற்றிக் கொள்ளும் காலம் இருந்தது.

இயந்திரத்திற்கு எரிபொருள் அல்லது மின்சாரம் கொடுப்பது போல அடிமைக்கு தேவையான உணவும் பானமும் கொடுத்து வேலை வாங்குவது அன்றைய நடைமுறை. அடிமைத்தனம் இப்போது உலகம் முழுவதும் தடை செய்யப்பட்டுள்ளது. ஆயினும்கூட, அடிமைத்தனம் இன்னும் நடைமுறையில் உள்ளது.

இந்தப் பருவத்தின் சமூகப் பேச்சு அந்த அடிமைத்தனத்தை ஒழிப்பதாக இருக்க வேண்டும்.

எல்லை தாண்டிய சமூக வலைத்தளங்களுக்கு அடிமையாகி தற்போது பெரும் போதையாக மாறியுள்ளது. தகவல் தொழில்நுட்ப உலகில் வாழ்கிறோம் என்று குறை கூறும் நவீன சமூகம், சமூக வலைத்தளங்களில் உள்ள தேவையற்ற விடயங்களைத் தலையில் போட இணைய இணைப்பைப் பதிவு செய்கிறது.

சமூகம் எல்லாவற்றையும் ஒன்லைனில் செய்யப் பழகி விட்டதால், இந்த நாட்டில் அனைத்து முடிவுகளுக்கும் சமூக ஊடகங்கள் இப்போது திறவுகோலாக மாறியுள்ளன. வெளியிடப்பட்ட உண்மைகளைப் பற்றி எந்த மனநிறைவும் இல்லை. எல்லாமே உண்மை என்று எடுத்துக் கொள்ளப்படுகிறது. எந்த விசாரணையும் இயக்கப்படவில்லை.

இளைய தலைமுறையினர் சமூக வலைத்தளங்களின் கைதிகளாக வாழ்கிறார்கள். சமூக ஊடகங்கள் தான் அவர்கள் பெறும் ஒவ்வொரு தருணத்திலும் தங்கள் கவனத்தைச் செலுத்துவதால் அவர்களின் வாழ்க்கைக்கான முடிவுகளை முன்னோடியில்லாத வகையில் அவர்களுக்கு வழங்குகிறது. அவர்களின் வருமான ஆதாரங்களான ஈஸி கேஷ் காரணமாக, ஒரு குறிப்பிட்ட குழுவினர் அந்த நோக்கத்திற்காக நிலைநிறுத்தப்பட்டுள்ளனர்.

வெறும் பொழுதுபோக்கு அவ்வளவு தீவிரமான பிரச்சினை இல்லை என்றாலும், இணையம் அவர்களின் அனைத்து தேவைகளுக்கும் ஒரு கருவியாக மாறும்போது, சமூகம் இறுதியாக 'ஆர்டர் மற்றும் பெற்றது' என்ற வித்தியாசத்தை அனுபவிக்கும். இதற்கு நேர்மாறாக, இந்த நவீன மனித உயிர்களைச் சிறையில் அடைத்துள்ளது.

சமூக ஊடக வெளி என்பது முற்றிலும் நிராகரிக்கப்படக்கூடிய ஒன்றல்ல. அதை அடிமையாக்கி, அந்த மட்டத்தில் எல்லாவற்றையும் முடிவு செய்யப் போவது, விட்டுக்கொடுப்பதன் மூலம்தான் சமூக ஊடகங்களின் அடிமைத்தனத்திலிருந்து ஒருவனை விடுவிக்க முடியும். தனிப்பட்ட உறவுகளுக்கான சமூக ஊடகங்களின் உடனடி மற்றும் உடனடித் தன்மை நவீன மனித வட்டத்திற்கான ஒரே பிணைப்பாக மாறியுள்ளது.

இந்த பிணைப்பின் காரணமாக, மனித உறவுகள் சில வடிவங்களைப் பெறுகின்றன. சொன்னதையும் செய்ததையும் நிரந்தரமாகக் குறிப்பதன் மூலம், கடந்த காலக் கோப்பு அழிக்கப்பட்டவுடன் மற்றொரு நபரின் அடையாளத்தை அழிக்க எளிதாகப் பயன்படுத்தப்படும். நாடகத்தின் நீள அகலம் தெரியாமல் மேடைக்குள் நுழைபவர்கள், பயணத்தைக் கடந்து வந்தாலும் இந்த மேடை இப்படியல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அடிமைத்தனத்தை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் என்பதால், சமூக ஊடகங்களுக்கு அடிமையாக இருக்கக்கூடாது, கவனமாகவும் தேவையான அளவிலும் பயன்படுத்த வேண்டும்


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

அச்சம், பயம் சஞ்சலம் இவையெல்லாம் ஒரே கருத்தாகத் தோன்றலாம். ஆனால், சதா மனம் குழம்பியபடியே இருப்பது சஞ்சலம். பயம், சில சந்தர்ப்பங்களில் எவருக்கும் நேரலாம். ஆனால், எல்லா விடயங்களக்கும் தன்னை இழந்திருப்பது அச்சத்தின் வெளிப்பாடாகும்.

சில விடயங்களில் நாம் சந்தர்ப்பங்களுக்கு ஏற்பட நடந்து கொள்ளவேண்டும். ஒருவன் குடிபோதையில் கத்தியுடன் தன்பாட்டிற்குச் செல்லும்போது, அவனை மறித்து உபதேசம் செய்யலாகாது. இது அச்சமற்ற செயல் அல்ல, வீரத்தை எல்லா நேரங்களிலும் காட்டலாகாது.

சும்மா போனவனைச் சண்டைக்கு இழுக்கலாகாது. அதன் விபரீதம் பெரிதாகலாம். அது கோஷ்டிச் சண்டையாகவும் மாறிவிடலாம். சில சந்தர்ப்பங்களில் கோழையும் வீரனாகின்றான். ஒருவரை வலிந்து தொடர்ந்து இம்சித்தால், அவன் சிங்கம் போல எழுந்து தாக்கி வீழ்த்திவிடுவான்.

துன்பமான விடயங்களை எதிர்கொண்டவர்கள் அச்சத்தைத் துச்சமாக்கி விடுகின்றார்கள். வாழ்க்கையில் துணிவு பிரதானமானது. முன்னேற்றத்தை இது உருவாக்கும்.

நன்றி–பருத்தியூர் பால.வயிரவநாதன்

# பொன்னான வாய்ப்பு பயன்படுமா?

**லக்ஸமன்**

இலங்கையின் ஜனாதிபதிகளாக இருந்தவர்களும், ஆட்சிகளை நடத்திய அரசாங்கங்களும் தங்களுடைய அரசியல்களையே இதுவரை காலமும் செய்து வந்திருக்கின்றனர். ஆனால், அவர்கள் நாட்டுக்கான, மக்களுக்கான அரசியலை செய்திருக்கவில்லை என்பது வெளிப்படையானது. அதன் பயனே தேசிய மக்கள் சக்தி நாட்டைக் கைப்பற்றியமைக்குச் சாட்சி.

பொன்னான சந்தர்ப்பங்கள் தவறவிடப்படுவது வரலாற்றில் பல்வேறு அழிவுகளுக்கும், கொடூரங்களுக்கும் வழிவகுத்திருக்கிறது என்பதே உண்மை. இலங்கையில் புரையோடிப்போன இனப்பிரச்சினைக்கான தீர்வை வழங்குவதற்கும் மகிழ்ச்சியானதும் வளம் பெருகுவதுமான நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பங்கள் பல தடவைகளில் ஏற்பட்டிருந்தன.

அப்போதெல்லாம், பெரும்பான்மை மக்கள் மாத்திரமல்ல சிறுபான்மைகளாகக் கணிக்கப்படுகின்ற தமிழ், முஸ்லிம் மக்களும் பங்குபற்றி இருக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் பல தடவைகளில் ஏற்பட்டிருந்தன.

தவறுகள் பல விடபட்டிருந்தாலும், இலங்கையில் சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சியின் போது, முதலாவது குடியரசு அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. அடுத்து, தனக்கான அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன குடியரசு அரசியலமைப்பைத் திருத்திக் கொண்டார். இருந்தாலும், இந்தியாவுடன் இணைந்து ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தி, 13ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்து மாகாண சபைகளின் ஊடாக அதிகாரங்களைப் பரவலாக்க முயற்சி எடுத்திருந்தார்.

அடுத்தது சமாதான புறாவாகத் தமிழ் மக்களால் பார்க்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக் காலமாகும். அக்காலத்தில் இடைக்கால நிர்வாக சபை உடனான தீர்வு கொண்டுவரப்பட்டுக் கிழித்தும் எறியப்பட்டிருந்தது. பின்னர் 2009இல் முள்ளிவாய்க்காலுடன் யுத்தம் மௌனிக்கச் செய்யப்பட்டு அதன் பின்னர் உருவான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலம், சிங்கள மக்கள் அவரை மகாராஜாவாகப் பார்த்த காலம். அன்று மகிந்த ராஜபக்ஷ நினைத்திருந்தால் சிங்கள மக்களின் வாயை அடைத்து தமிழ் மக்களுக்குத் தீர்வினை கொடுத்திருக்கலாம். ஆனால், அது நடை பெற்றிருக்கவில்லை. தவறவிடப்பட்டிருந்தது.

அதேபோன்று, மாற்றம் என்ற தோரணையில் பெரும்பாலான தமிழ் மக்களும் வாக்களித்து தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதியையும், புதிய அரசாங்கத்தையும் உருவாக்கியிருக்கின்ற காலம் இப்போது ஏற்பட்டு இருக்கிறது.

இக்காலத்திலேனும் தமிழ் மக்களுக்கான, அவர்கள் எதிர்பார்க்கின்ற சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுதந்திரம் வழங்கப்படவில்லை. ஆனால், இனி எந்த ஒரு காலத்திலும் வழங்கப்படப் போவதில்லை என்பதே நிச்சயமானது. அது சிங்கள பெரும்பான்மை மனோநிலையின் பயனே என்று தமிழர்கள் எண்ணிக்கொள்ள வேண்டியதுதான்.

இலங்கையின் அரசியல் வரலாறானது மேலாதிக்கத்தினாலும், விட்டுக் கொடுப்பின்மையினாலும் பரஸ்பர சந்தேகங்களும் வரையப்பட்டிருக்கிறது என்பதற்கு மாற்றுக்கருத்திருக்கக்கூடாது.

ஈழத் தமிழர்களின் அரசியல் வரலாற்றில் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தமிழரின் அடிப்படை உரிமையான சுயநிர்ணய உரிமையை மீறுவதாக அமைய முடியாது என்பதே அனைவருடைய கோரிக்கையாகும். ஆனால், அதனைப் பெற்றுக் கொள்வதற்காக நடந்து வருகின்ற பிரயத்தனங்கள் பயனற்றுப் போனதே வரலாறு.

1947இல் கொண்டுவரப்பட்ட சோல்பரி அரசியலமைப்பு ஈழத் தமிழர்களின் ஆணையைக் கொண்டிருக்கவில்லை. ஆனாலும், இது குறைந்தபட்ச பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு விதியை (பிரிவு 29) தமிழர்களுக்கு வழங்கியிருந்தது. இந்த அரசியலமைப்பால் வழங்கப்படும் பாதுகாப்புக்கள் மீறப்பட்டால், ஐக்கிய இராச்சியத்தின் கோமறைமன்றில் மேன்முறையீடு செய்யும் வாய்ப்பு இருந்தது.

1972ஆம் ஆண்டு அரசியலமைப்பு மூலம் பிரித்தானிய முடி அரசுடனான உறவுகளைத் துண்டித்ததோடு, இங்கிலாந்தில் உள்ள கோமறை மன்றில் மேல்முறையீடு செய்யும் தமிழ் மக்களின் உரிமை பறிக்கப்பட்டது. 1972 அரசியலமைப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டே 1978இல் இரண்டாவது அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது.

இந்த இரண்டு அரசியலமைப்புகளுமே தமிழ் மக்களின் பங்களிப்பு இல்லாமலேயே உருவாக்கப்பட்ட வைகளாகும். அதன் பின்னர் இந்த அரசியலமைப்பு 22 திருத்தங்களைக் கண்டிருக்கிறது. இருந்தாலும் 13 தவிர, இவை எதுவும் தமிழ் மக்களுடைய அரசியலுரிமைக்கானதாக அமைந்திருக்கவில்லை.

மாறி மாறி இந்த நாட்டை ஆண்ட அரசாங்கங்கள் தங்களது தேவைக்காக அரசியலமைப்பில் மாற்றங்களைக் கொண்டு வருகின்றார்கள்.

இந்த அரசியலமைப்பில் 45 வருட காலத்தில் 2ஆவது திருத்தம் முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராஜதுரையை அரச தரப்பிற்குள் கொண்டு வருவதற்காகக் கட்சி மாறும் உறுப்பினர்களுடைய உறுப்புரிமையை பாதுகாப்பதாக இருந்தது. 3ஆவது திருத்தம் ஒரு ஜனாதிபதி ஆறு வருடங்கள் ஆட்சியில் இருக்கலாம் என்பதை மாற்றி அவரது ஆட்சிக் காலத்திலே நான்கு வருடத்தினுள் தேர்தலை நடத்தலாம் என்பதாகக் கொண்டு வரப்பட்டிருந்தது.

6ஆவது திருத்தம் தமிழர்களின் அடிப்படையான கோரிக்கையை வலுவிழக்கச் செய்வதற்கு, அப்போதைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களாக வந்தவர்களைச் சபையிலிருந்து வெளியேற்றும் வகையில் ஏற்படுத்தப்பட்டது.

18ஆவது திருத்தம் மகிந்த ராஜபக்ஷவின் அதிகாரத்தைப் பலப்படுத்தக் கொண்டு வரப்பட்டது. 19ஆவது திருத்தம் ராஜபக்ஷ குடும்பத்தை மையப்படுத்தி அவர்களை அரசியலில் இருந்து ஒதுக்குவதற்காக ஏற்படுத்தப்பட்டது. 20ஆவது திருத்தம் மீண்டும் கோட்டபாய ராஜபக்ஷவின் அதிகார வெறிக்கு உரமூட்டி இருந்தது.

ஒரு நாட்டின் அரசியலமைப்பில் மாற்றமோ, திருத்தமோ ஏற்படுத்தப்படக் கூடாது என்று எந்த யதார்த்தமும் இல்லையானாலும், இலங்கையின் அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்டுள்ள திருத்தங்கள் எதுவுமே நாட்டு நலனில் அக்கறையற்று ஒரு சிலரது, ஒரு சில கட்சிகளது விருப்பங்களை நிறைவேற்றுவதற்காகத் தான் கொண்டு வரப்படுகின்றன என்பதே இலங்கையின் யதார்த்தமாக இருந்திருக்கிறது.

13ஆவது திருத்தச் சட்டம் ஒன்றுதான் இலங்கையில் மக்களின் பிரச்சினைகளை ஓரளவேனும் தீர்ப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டமாக இருந்தது. அதனைத் தமிழர்கள் முழுமையாக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அவ்வாறு இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஆரம்பப் புள்ளியாக இருக்கட்டும் என்ற வகையிலேயே நடந்து கொண்டனர். ஆனால், அரசாங்கம் அச்சட்டத்தின் மூலமான அதிகாரங்களை வழங்குவதனை விடுத்து ஆளுநர்கள் மூலமாகவும் பாராளுமன்றத்தின் மூலமும் அதிகாரங்களைப் பறிப்பதிலும் அடக்குவதிலும் குறியாக இருந்து வந்தன. அந்த வகையில் அரசியலமைப்பினை மீறியும் செயல்பட்டுள்ளன.

இன, மத, மொழி, பேதமின்றி கட்சி அரசியல் பேதமின்றி நாடாக ஒன்றிணைய வேண்டும் என்ற தொனியுடன் செயல்பட முனையும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது உருவாகவுள்ள புதிய அரசியலமைப்பின் ஊடாக புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினைக்குத் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய ஒரு தீர்வை முன்வைக்க வேண்டும். வீர வசனங்களும், கொக்கரிப்புகளும் அரசியலில் சாதாரணம் என்றாலும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களை ஏற்க மறுப்பதும், போர்க்குற்றவாளிகளுக்கான தண்டனை விடயத்தினைப் புறந்தள்ளுவது சிங்கள மக்களை கைக்குள் வைத்துக்கொள்வதற்காகவா என்று கேள்வி எழுப்பப்படாதபடி இருக்க வேண்டும். அதை விடுத்து சிங்களப் பெரும்பான்மை மக்களை சமாதானப்படுத்துகின்ற, ஆறுதல் படுத்துகின்ற வகையிலான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படுமானால் கடந்த காலங்களில் சமாதான புறாவை நம்பி ஏமாந்த கதையே தமிழர்களுக்கு ஏற்படும்.

இந்திய இலங்கை ஒப்பந்தம், 13ஆவது திருத்தம், மாகாண சபை முறைமை எல்லாமே இந்தியாவினது இணைவுடன் கொண்டுவரப்பட்டாலும், ஒரு நாடு என்று வகையில் அது இலங்கையினுடைய முடிவு என்கிற இராஜதந்திர நிலைப்பாட்டுடன் இருக்கின்ற இந்தியா, 13ஆவது திருத்தச் சட்டத்தை முழு அதிகாரத்துடன் நிறைவேற்றுதல், மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில், இந்தியா ஜனாதிபதித் தேர்தலை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க எதிர்கொள்வதற்கு முன்னே அவரிடம் டெல்லிக்கு அழைத்துக் கூறியிருந்தது.

இப்போது அவர் ஜனாதிபதி. இருந்தாலும் சீனா தற்போது நாட்டுக்குள் ஆதிக்கம் செலுத்தும் சக்தியாக மாறிக் கொண்டிருக்கிறது. இதற்குப் போட்டியாக இந்தியாவும் பல்வேறு வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்து வருகிறது.

எது எவ்வாறாயினும், புதிய அரசியலமைப்புக்கான வேலைகள் அவசர அவசரமாக நாட்டுக்குள் நடைபெற்று விடப்போவதில்லை என்றாலும், இப்போது கிடைத்திருக்கின்ற பொன்னான வாய்ப்பை பயன்படுத்துவது, வீணே விட்டுவிடுவதும் அரசாங்க இயக்கத்தின் கையிலேயே உள்ளது என்பது மாத்திரம் கள யதார்த்தமாகும்.

பொன்னான வாய்ப்பினைப் பயன்படுத்தி சிங்கள மக்களும் ஆதரிக்கின்ற, தமிழ் மக்கள் ஏற்றுக் காhள்கின்றதான தமிழ் மக்களின் ஒப்புதலுடனான அரசியலமைப்பொன்று உருவாக்கப்படுமானால் அது அந்த வாய்ப்பினைப் பயன்படுத்தியதாக அமையும். விடுத்து ஒற்றையாட்சியும், மொழி, மத முன்னுரிமையுடன் அரசியலமைப்பு உருவாகுமானால் அது வீணான முயற்சியே அன்றி வேறில்லை.

## கடிதங்கள்

### பொதுமக்கள் விசனம்



திருகோணமலை-அன்புவழிபுரம் வட்டாரத்தில் திண்மக்கழிவு அகற்றும் செயற்பாடு வாரா வாரம் சீராக இடம்பெறாமையால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியத்துக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இப்பகுதியில் ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில் திண்மக்கழிவு அகற்ற நகரசபையின் வாகனங்கள் வரும். இருப்பினும், சீராக அகற்றப்படுவதில்லை என பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த தினத்தில் கழிவு எடுக்கும் வாகனம் வருகை தராத காரணத்தால் சிறிய காணிகளில் நெருக்கமாக வாழுகின்ற மக்கள் தமது கழிவுகளை வீதியில் வைத்துச் செல்கின்றனர். அதை இரவு நேரங்களில் தெரு நாய்கள் இழுத்து வீதி முழுவதும் கழிவுகள் விழுந்து துர்நாற்றம் வீசுகிறது. அதேநேரம், கிணறுகள் மற்றும் நீர்நிலைகளில் காகங்கள் மூலம் எடுத்துச் செல்லப்படுகிறது. இதன் மூலம் சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது.


மேலும், நகரசபையின் வேலை தொழிலாளர்கள் மற்றும் சுகாதார தொழிலாளர்கள் அலுவலக உத்தியோகத்தர் அதிகமாக வாழும் அன்புவழிபுரம் வட்டாரம் காந்திநகர் கிராமத்திலும் இதேநிலை தொடர்கின்றது.

எனவே, நகர சபையின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் விடயத்தைக் கருத்தில் கொண்டு குறித்த சுகாதாரத்திற்கு அச்சுறுத்தலான விடயத்திற்குத் தீர்வு காணுமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

- வடமலை ராஜ்குமார்

## ‘CubKit’ அறிமுகத்துக்காகBaseKit Platform UK உடன்

# SLT-MOBITEL கைகோர்ப்பு




இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தரளவு வியாபாரங்களுக்கு வலுவூட்டுவதற்காக ஐக்கிய இராஜ்ஜியத்தை தளமாகக் கொண்டு இயங்கும் BaseKit Platform Limited உடன் மூலோபாய பங்காண்மையை ஏற்படுத்தியுள்ளதாக SLT-MOBITEL அறிவித்துள்ளது.

இலங்கையின் ஒவ்வொரு வியாபாரத்துக்கும் டிஜிட்டல் ரீதியில் வலுவூட்டி, இலங்கை சந்தைக்கு பொருத்தமான புத்தாக்கமான புதிய சேவைகளை பெற்றுக் கொடுக்கும் SLT-MOBITEL இன் நோக்கத்துக்கமைவானதாக BaseKit உடன் கைகோர்த்து CubKit ஐ அறிமுகம் செய்வது அமைந்துள்ளது. சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகளுக்கு சுயமாக இணையதள வடிவமைப்பு ஆற்றல்களை வழங்குவதனூடாக, தரமான இணையதள வடிவமைப்பு மற்றும் e-வணிக அணுகலை ஏற்படுத்திக் கொடுக்க SLT-MOBITEL எதிர்பார்ப்பதுடன், டிஜிட்டல் மாற்றியமைப்பு மற்றும் e-வணிக பின்பற்றலை துரிதப்படுத்தவும் எதிர்பார்க்கின்றது.

SLT-MOBITELஇன் MSME Product Development அணியானது, BaseKit Platform Limited உடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளதனூடாக, இலங்கை சந்தையில் தீர்வுகளை அறிமுகம் செய்து விநியோகிக்க முன்வந்துள்ளது. நுண், சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைகளுக்கு தற்போது சகாயமான, முழுச் சேவையாற்றல் கொண்ட இணையத்தள வடிவமைப்பு வசதியின் பயனை அனுபவிக்க முடியும். இலங்கை முழுவதிலும் SLT-MOBITELஇன் விநியோக ஆற்றலினூடாக இதனை அனுபவிக்கக்கூடியதாக இருக்கும்.

அண்மையில் நடைபெற்ற நிகழ்வில், BaseKit Platform Limitedஇன் ஸ்தாபகரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சைமன் பெஸ்ட், மெய்நிகரான முறையில் இணைந்து கொண்டார். SLT-MOBITEL குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக அபேசிங்க, SLT-MOBITEL பிரதான பணிப்பாளர் சபை அறையில் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார்.

Basekitஇன் வியாபார அபிவிருத்தி நிறைவேற்று அதிகாரி கார்ல் கில் மெய்நிகரான முறையில் இணைந்து கொண்டார்.

SLTஇன் சிரேஷ்ட அதிகாரிகளான SLT-MOBITEL குழுமத்தின் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி பிரபாத் தஹநாயக்க, Enterprise and SME தயாரிப்புகள் பொது முகாமையாளர் செல்வேந்திரன் வித்யாபன், Micro & SME Product Development & Management பிரதி பொது முகாமையாளர் ரவின் தரிந்திர, MSME Product Developmentசந்தைப்படுத்தல் முகாமையாளர் சமிளா தர்மசேன, Engineer MSME Product Development மதுகா பண்டார ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

CubKit Web Builder என்பது BaseKit web builder இன் மீளமைக்கப்பட்ட வெளியீடாக அமைந்துள்ளது. இதனை hostingcub.com இனூடாக பெற்றுக் கொள்ளலாம். பாவனையாளருக்கு நட்பான உள்ளமைப்பு, booking engines உடனான ஒப்பற்ற ஒன்றிணைப்பு, வாடிக்கையாளர்களுக்கு தமது சொந்த கொடுப்பனவு கேட்வேகளை ஒன்றிணைக்கும் வசதி,SEO optimization tool மற்றும் unlimited bandw idth உடன் unlimited hosting space போன்ற வசதிகளை வழங்குகின்றது.

SLT-MOBITELஇன் புதிய தயாரிப்பு ‘CubKit’ ஊடாக, உயர்மட்ட தகவல் தொழில்நுட்ப திறனுக்கான அவசியமின்றி, drag-and-drop இணையத்தள வடிவமைப்பு வசதியை வழங்குகின்றது. இதனால் வியாபாரங்களுக்கு வேகமாகவும், இலகுவாகவும் இணைய பிரசன்னத்தை ஏற்படுத்திக்கொள்ள முடியும். இது இலங்கையில் காணப்படும் சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல்லாக அமைந்துள்ளது. இந்த tool இனூடாக, வியாபாரங்களுக்கு உறுதியான ஒன்லைன் பிரசன்னத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு அவசியமான உள்ளம்சங்கள் வழங்கப்படுவதுடன், வியாபார வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவியாக அமைந்திருக்கும்.

இந்த கைகோர்ப்பினூடாக, டிஜிட்டல் மயமாக்கம் என்பது தொடர்பான உறுதியற்ற MSME உரிமையாளர்களுக்கு, SLT-MOBITEL இன் நம்பிக்கையை வென்ற பங்காண்மை காணப்படுவதுடன், ஒன்லைனில் Basekit இன் கட்டமைப்பை பெற்றுக் கொள்வதற்கான வழிகாட்டல்கள் வழங்கப்படும். அதனூடாக அவர்களுக்கு புதிய வருமான மூலங்களை ஏற்படுத்திக் கொள்வதற்கும், தமது ஒன்லைன் வர்த்தக நாமம் மற்றும் செயற்பாடுகளில் கட்டுப்பாட்டை பேணுவதற்கும் உதவியாக அமையும்.

# இலங்கையை போர்மியுலா Iக்கு கொண்டு செல்லவுள்ள யெவான் டேவிட்



இலங்கையின் புகழ்பெற்ற இளம் போர்மியுலா 3 பந்தய வீரரான யெவான் டேவிட், இலங்கையை போர்மியுலா 3 பந்தயத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் நிலைக்கு உயர்ந்தும் நிலையை நோக்கி தாம் முயற்சிகளை மேற்கொள்வது தொடர்பில் அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தார். இந்த நிகழ்வில், இதுவரையில் யெவானின் வெற்றிகளில் பங்களிப்பு வழங்கியிருந்த பலம் வாய்ந்த அணியினரை வெளி உலகுக்கு அறிமுகம் செய்திருந்தார். அத்துடன் யெவான் இதுவரையில் கடந்து வந்த வெற்றிப் பயணம் தொடர்பிலான விளக்கங்களை வழங்கியிருந்ததுடன், இலங்கை சார்பாக அவர் எய்தியுள்ள சாதனைகளை கொண்டாடியிருந்தார்.

சர்வதேச புகழ்பெற்ற பந்தய வர்ணனையாளரான ஜேக் சான்சனின் ஆரம்ப உரையுடன் நிகழ்வு ஆரம்பமானது. இவர் யெவானின் பந்தய பயணம் தொடர்பான ஆழமான விளக்கங்களை வழங்கியிருந்தார். “இலங்கையை போர்மியுலா 1 உலகுக்கு கொண்டு செல்லும் நபர்” என யெவானை இவர் அறிமுகம் செய்திருந்தார்.

சகல போர்மியுலா 3 பிரிவிலும் பல தடவைகள் வெற்றியீட்டியுள்ள இலங்கையின் முதலாவது போர்மியுலா பந்தய வீரரான யெவான், தனது நோக்கம், இலட்சியம் மற்றும் வாழ்க்கையை மாற்றுவதில் ரேசிங்கின் வலிமை தொடர்பான விடயங்களை நிகழ்வில் பங்கேற்றிருந்தவர்களுடன் பகிர்ந்து கொண்டார். அண்மையில் மொன்ஸாவில் பெற்றுக் கொண்ட வெற்றி தொடர்பில் யெவான் குறிப்பிடுகையில், “இலங்கையில் உள்ளமையையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைவதுடன், அனைவரிடமிருந்தும் கிடைக்கும் சிறந்த ஆதரவு தொடர்பில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். தேசத்தை பிரதிநிதித்துவப்படுத்த கிடைத்த வாய்ப்பு மிகவும் பெருமைக்குரியதாக அமைந்திருப்பதுடன், விளையாட்டின் உச்ச நிலைக்கு எமது கொடியை கொண்டு செல்வதற்கு நான் முயற்சிக்கின்றேன்” என்றார்.

யெவானின் அறிமுக ஆண்டில் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் சாதனைகள் தொடர்பில் அவரின் முகாமையாளர் ஹொரியா டொட்டு குறிப்பிடுகையில், “இந்த ஆண்டு நாம் அவதானித்த பெருமளவு முன்னேற்றம் மற்றும் திறமையின் அடிப்படையில், யெவானுக்கு ஆகாயமே எல்லையாக அமைந்திருக்கும்” என்றார்.

யெவானின் உடற்தகைமை பயிற்றுவிப்பாளர் அலெக்ஸ் ஸ்டொட் மோட்டார் விளையாட்டில் முன்னேறுவதற்கு உடல் மற்றும் உளசார் நிலையின் முக்கியத்துவம் மற்றும் அவற்றில் யெவானை தயார்ப்படுத்துவது தொடர்பில் குறிப்பிடுகையில், “யெவானின் அர்ப்பணிப்பு, திறமை மற்றும் செயற்பாடுகள் போன்றன தலைமுறையில் ஒரு தடவை மாத்திரமே வெளிப்படுத்தப்படுவதாக அமைந்துள்ளது. யெவானிடம் நான் தொடர்ச்சியாக அவதானிப்பது, போர்மியுலா 1 வரை முன்னேறிய, நான் முன்னர் பணியாற்றிய பந்தய வீரர்களை விட இவரின் நடவடிக்கைகள் சிறப்பானவையாகவும், அவர்களை விட விஞ்சியவையாகவும் அமைந்துள்ளன” என்றார்.

யெவானின் சர்வதேச ஊடக உறவுகள் மற்றும் தொடர்பாடல் முகாமையாளர் அண்டி ஸ்டோபார்ட் குறிப்பிடுகையில், “ஒன்லைனில் யெவானின் வேகமாக அதிகரித்து வரும் பிரசன்னம், வெளிப்படுத்தல்கள், பெறுபேறுகள் மற்றும் சர்வதேச ஊடக நாட்டம் போன்றன இவரை இலங்கையின் தூதுவராக சர்வதேச அரங்கில் திகழச் செய்துள்ளதுடன், அவரின் திறமைகளுக்கு எடுத்துக்காட்டாகவும் அமைந்துள்ளன” என்றார்.

யெவானின் சாதனைகளை கொண்டாடியிருந்தமை மட்டுமன்றி, வரலாற்று சாதனை படைக்கும் அவரின் ஆற்றலை வெளிக் கொண்டு வருவதாகவும், ஃபோர்மியுலா 1 நோக்கிய அவரின் பயணத்துக்கு கூட்டாண்மை அனுசரணையைப் பெற்றுக் கொள்வதற்கு அழைப்புவிடுப்பதாகவும் அமைந்திருந்தது.




# கரிசனை வேண்டும்



சு.சுஜேந்திரம்,
ஊடகத் துறை,
இரண்டாம் வருடம்,
யாழ்.பல்கலைக்கழகம்

பல்லின கலாசாரத்தைக் கொண்ட இலங்கையின் மக்கள் தொகை வளர்ச்சியானது சுமார் 23,138,848ஆக உயர்ந்து நிற்கின்றது. இதன்படி, இலங்கையில் உள்ள மக்களின் கல்வி மற்றும் பொருளாதார நிலைகளில் வளர்ச்சி வீதமானது கூடி செல்கின்ற அதேவேளை, அண்மைக் காலமாக பேசுபொருளாக மாறியுள்ள தொற்று நோய்கள் தொடர்பிலும் அதிக கரிசனை செய்ய வேண்டிய தேவைப்பாடு எழுந்துள்ளது. ஒப்பீட்டளவில் குறைவாக இருந்தாலும் இலங்கை மக்கள் மத்தியில் இன்றளவிலும் காணப்படும் HIV நோய் தொடர்பில் முக்கிய கரிசனை செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது.

### HIV தொற்று என்பது யாது?

HIV தொற்று என்பது HUMAN IMMUNODEFICIENCY VIRUS எனும் ஒரு வைரஸ் ஆகும். இது குறிப்பாக மனித உடலின் நோய் எதிர்ப்பு மண்டலத்தினை பாதித்து நோய்கள் மற்றும் தொற்றுக்கு எதிராகப் போராடும் திறனைக் குறைக்கின்றது. குறிப்பாக எனும் செற்களைப் பாதிக்கின்றது. இவ்வாறாக இந்த நோய்த் தொற்று மனித உடலில் இரத்த பரிமாற்றத்தின் போதும், உடலுறவின் போதும், தாய் குழந்தைக்கு பாலூட்டும் போதும், மருத்துவ கருவிகள் மற்றும் சிகை அலங்கார நிலையங்கள் என்பன முறையாகப் பராமரிக்காத சந்தர்ப்பங்களிலும் ஒருவரிலிருந்து மற்றவருக்குப் பரவுகின்றது.

இந்நோய் தொடர்பில் ஒரு தடுப்பினை ஏற்படுத்துவதற்காக சில மருந்துகளும் தடுப்பூசி வகைகளும் பயன்பாட்டில் காணப்படுகின்றன. 1980ஆம் ஆண்டின் பிறகு இந்த நோய் கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து 40 மில்லியன் உயிர்களைக் காவு கொண்டிருக்கின்றது என்று உலக சுகாதார மையம் தகவல் தெரிவித்துத்துள்ளது. அதேவேளை, இலங்கையோடு ஒப்பிடும் பொழுது, இந்த நோய் நிலைமையானது பாதிப்பு குறைந்ததாகவே காணப்பட்டாலும், இது ஒரு சுகாதார சவாலாக இருக்கின்றது என்பதையும் மறந்து விட முடியாது.

### HIV ஆராய்ச்சியில் புதிய முன்னேற்றங்கள்

ஆரம்பக் காலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நடைமுறை உலகில் இந்த தொற்றுக்கு எதிராக பல மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக prime boost எனும் தடுப்பூசியில் PrEP எனும் மருந்தாகும். இந்த மருந்தினை தொடர்ச்சியாகத் எடுத்துக் கொள்ளல், தன்னாட்சி சிகிச்சையைப் பெறல் (ART) என்பவற்றின் மூலம் இந்த தொற்றிலிருந்து 99 சதவீதமான பாதுகாப்பினை பெறலாம் என்று மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர். இந்தநிலையில், இலங்கையில் இந்த தொற்று நோய் எந்த அளவிலான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதிலிருந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டிய வழிவகைகள் என்ன? என்பதை இலங்கை மக்களாகிய நாம் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாத தேவைப்பாடாக உள்ளது.

### இலங்கையில் HIV தொற்றின் தாக்கம்

இலங்கையில் HIV தொற்று என்பது குறைவு என்றாலும், முற்றாக இல்லை என்று சொல்லிவிட முடியாது. இதன்படி, இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் நிலை சமீப காலங்களில் ஒரு உயர்ந்த சதவீதத்தினை காட்டி நிற்கின்றது. குறிப்பாக, கடந்த 2023ஆம் ஆண்டில் 181ஆக இருந்த இந்த தொற்று 2024ஆம் ஆண்டில் 214ஆக உயர்ந்த நிற்கின்றது. இதன்படி, (AIDS control, HIV/ AIDS DATA HUB FOR THE ASIA PACIFIC) தரவுத் தள அறிக்கையின்படி, இந்த வருடத்தில் மாத்திரம் ஏறத்தாழ 4,700 முதல் 7,200 வரையிலான நபர்கள் HIV தொற்றுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். குறிப்பாக, இதில் 15 தொடக்கம் 24 வயதிலான ஆண் மற்றும் பெண்களின் பாதிப்பு 7.1 என்ற விகிதத்தில் உள்ளது என்பதுடன், தரவுகளின் படி, பாதுகாப்பற்ற பாலியல் உறவுகள் மூலமாகவே இந்த தொற்றுகள் அதிகளவாக ஏற்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

### HIV தொற்று தொடர்பிலான இலங்கை அரசின் போக்கு

இலங்கை மக்களுக்கு ஒரு தெளிவுபடுத்தலையும் விழிப்புணர்வையும் ஏற்றுக்கொள்ளும் பொருட்டு, சுகாதார அமைச்சின் கீழ், தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்டம் என்று அமைப்பு இயங்கி வருகின்றதுடன், இந்த அமைப்பின் ஊடாக குறித்து இந்த நோய் தொடர்பில் கல்வி நிலையங்கள் ஊடாகவும் பொதுமக்கள் மத்தியிலும் இன்றளவிலும் பல விழிப்புணர்வு திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், இலவசமாக HIV பரிசோதனை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில், மருத்துவ மையங்களும் இலங்கையில் அமைக்கப்பட்டுள்ளதுடன், பாதிப்பைத் தடுக்கும் மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாது, இலங்கை அரசு யுனிசெப் போன்ற அமைப்புகளுடன் இணைந்து எச்.ஐ.வி. தோற்றை தடுக்கும் நடவடிக்கைகளைச் செய்து வருவதுடன், (LEADS , HEART TO HEART LANKA) அமைப்புகளின் மூலமாகவும் பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி, இலங்கையில் 2030க்குள் HIV நோய்த் தொற்று குறையும் என்று 2023 UNAIDS அறிக்கையில் கூறப்படுகின்றது. அத்துடன், குறைந்த HIV தொற்றுள்ள நாடுகளின் பட்டியல் இலங்கை இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

### ஆலோசனை மற்றும் உளவியல் ஆதரவு

எச்.ஐ.வி என்பது ஒரு நபரின் உடல் கூறுகளை விட சமூக, உளவியல் மற்றும் நெறிமுறை அம்சங்களை பாதிக்கும் ஒரு தொற்று ஆகும். ஆலோசனை சேவைகள் நிர்வாகத்தில் ஒரு முக்கிய அங்கமாக அடையாளம் காணப்படுகின்றன. எனவே, STD கிளினிக்குகளில் இணைக்கப்பட்டுள்ள அனைத்து சுகாதாரப் பணியாளர்களுக்கும் ஆலோசனையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. நோயறிதலின் போது, தடுப்பு, ART பின்பற்றுதல், குடும்பக் கட்டுப்பாடு, வெளிப்படுத்துதல், கர்ப்பம் மற்றும் பல்வேறு சமூகப் பிரச்சினைகள் குறித்து ஆலோசனை சேவைகள் வழங்கப்படுகின்றன. மத்திய கிளினிக்கில் மனநல மருத்துவர் சேவைகள் தேவைப்படும் PLHIV, ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வருகை தரும் மனநல மருத்துவ மனைக்கு பரிந்துரைக்கப்படுகிறது. மற்ற கிளினிக்குகளில், அவர்கள் அருகில் உள்ள மனநல நிபுணர் பிரிவுக்கு அனுப்பப்படுவார்கள்.

### பொது சுகாதாரம் மற்றும் அணுகுமுறை

எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்கான நிலையான பொது சுகாதார அணுகுமுறைகளை நாங்கள் கடைபிடிக்கிறோம். வாடிக்கையாளரின் முழு ஒப்புதலுடன் விரிவான ஆலோசனை மூலம் கூட்டாளர் அறிவிப்பு அல்லது குறியீட்டு வழக்கு சோதனை செய்யப்படுகிறது. கிளினிக் சந்திப்புகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட சிகிச்சையை கடைபிடிப்பது எச்.ஐ.வி. உடன் வாழும் மக்களின் ஆரோக்கியத்தின் வெற்றிக்கு முக்கியமாகும். நாங்கள் வாடிக்கையாளர்களைத் தொடர்புகொண்டு, அவர்களின் ஒப்புதலுடன், தேவைப்படும்போது பின்பற்றுவதை மேம்படுத்த முயற்சிப்போம்.



# இயற்கையை கொல்லும் மின்சார வாகனங்கள்



சிவகுமார் அனோஜா,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைகழகம்.

இன்றைய நவீன காலகட்டத்தில் உலகளாவிய ரீதியில் அனைத்து நாடுகளும் முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் பாரிய சவால் காலநிலை மாற்றமாகும். புதிய தொழில்நுட்பங்கள் எம் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தினால் மனிதனால் இயற்கையின் சீற்றத்திற்கு முழுமையான தீர்வு காண முடியாதுள்ளது. புவி வெப்பமடைதல் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகளில் ஒன்றாகப் போக்குவரத்துத் துறை காணப்படுகிறது. இச்சவாலை எதிர்த்துப் போராடும் வகையில், சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்காக உலகெங்கிலும் மின்சார வாகனங்கள் ஒரு முக்கிய தொழில்நுட்பமாக ஊக்குவிக்கப்படுகிறது. மின்சார வாகனங்கள் 21ஆம் நூற்றாண்டில் தோன்றிய புதிய தொழில்நுட்பம் அல்ல. இவை ஒரு நூற்றாண்டுக்கு மேலாக உள்ள தொழில்நுட்பம் ஆகும். 1970களில் ஏற்பட்ட எண்ணெய் நெருக்கடி, விலை உயர்வு மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு உள்ளிட்ட சவால்களினால் அதுவரை வீழ்ச்சி அடைந்திருந்த மின்சார வாகனங்கள் மீண்டும் புதிய தோற்றத்தைக் கண்டன.

International Energy Agency (IEA) அறிக்கையின்படி, மின்சார வாகனங்கள் உமிழ்வுகளின் அடிப்படையில் எரிவாயு வாகனங்களை விடச் சிறப்பாகச் செயல்படுகின்றன. குறிப்பாக பெட்ரோல், டீசல் பயன்படுத்தும் வாகனங்கள் கார்பன் டைஆக்சைட், பச்சை வீட்டு வாயுக்கள், நைதரசன் ஆக்சைட், கந்தகவீரொக்சைட்டு ஆகிய நச்சு வாயுக்களை வெளியிட்டுச் சூழலுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. சூழல் மாசுபாட்டைக் குறைப்பதற்கான ஒரு மாற்று வழியாக இன்று மின்சார வாகனங்கள் உலகெங்கிலும் புழக்கத்திற்கு வந்தன. இன்று மின்சார வாகனங்கள் குறைந்த பச்சை வீட்டு வாயு உமிழ்வைக் கொண்டிருப்பதாக ICCT இன் ஆய்வு முடிவுகள் காட்டுகின்றன.

சீனா, நோர்வே, அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய நாடுகள் மின்சார வாகன பயன்பாட்டில் முன்னணி வகிக்கின்றன. உலகத்தில் மட்டுமல்ல, இலங்கையிலும் மின்சார வாகனங்கள் பாரிய வளர்ச்சி கண்டு வருகின்றன. கடந்த சில வருடங்களாக நாட்டில் ஏற்பட்ட கொவிட்-19 மற்றும் பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் எரி பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்ட நிலையில் நாட்டு மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர். பாம்பு போல் வளைந்து நெளிந்து நீண்ட வரிசையில் எரி பொருட்களுக்காகக் காத்திருந்த மக்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளானதை எம்மால் மறக்க முடியாது. இவ்வாறான சூழ்நிலைகளின் காரணமாக இலங்கையில் கடந்த இரண்டு வருடங்களில் மின்சார வாகனங்கள் பிரபல்யம் அடைந்தது.

நிலைத்துள்ள போக்குவரத்திற்கான முயற்சியில் ஒரு முக்கிய நிகழ்வாக நாட்டின் முதல் மின்னணு வாகன கண்காட்சி 2024 ஜூன் 28 BMICH இல் இடம்பெற்றது குறிப்பிடத்தக்க விடயமாகும். மின்சார வாகனம் என்பது மின்சாரம் மூலம் இயங்கக்கூடிய ஒரு வாகனம் என்றும் சுருக்கமாக வரையறுக்கலாம். பெட்ரோல், டீசல் ஆகிய எரிபொருட்களில் இயங்கும் வாகனங்களுக்கு மாற்றாக மின்கலம் மூலம் இயங்கும் மின்சார வாகனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவை மின்கல மின்சார வாகனம் (Battery Electric vehicle), ஹைபிரிட் மின்சார வாகனம் (Hybrid Electric vehicle), பிளக்-இன் ஹைபிரிட் மின்சார வாகனம் (Plug in Hybrid Electric vehicle), எரிபொருள் செல் மின்சார வாகனம் (Fuel Cell Electric vehicle) என நான்கு வகையான மின்சார வாகனங்கள் உள்ளன. சூழல் மாசுபாட்டைக் குறைக்கும் நோக்கத்தில் மக்கள் மின்சார வாகனங்களை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றனர். எனவே, மின்சார வாகனங்கள் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைவதற்கு அதன் சாதகமான அம்சங்களே காரணமாக அமைகின்றன. மின்சார வாகனங்கள் கார்பன் உமிழ்வை குறைக்கின்றது. இது நேரடியாக $CO_2$ வெளியேற்றம் செய்வதில்லை. ஒரு மின்சார வாகனம் வருடத்திற்கு சராசரியாக 1.5 தொன் $CO_2$ வெளியேற்றத்தைக் குறைக்கிறது என ஆய்வுகள் கூறுகின்றன. காபன் வெளியேற்றம் குறைப்பதனால் வளிமண்டல மாசுபாடு குறைக்கப்பட்டு நகர்ப்புற மக்களின் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு வழிவகுக்கும். முதியோர்களுக்கும் குழந்தைகளுக்கும் சுவாசம் சார்ந்த நோய்கள் மற்றும் இதய நோய்கள் குறைக்கப்படுகின்றன. நகரங்களில் மின்சார வாகனங்கள் நைட்ரஜன் ஆக்சைடுகள் மற்றும் துகள்களால் ஏற்படும் மாசுவை குறைக்கின்றன. இதனால் காற்றின் தரம் மேம்படுகின்றது. மின்சார வாகனங்கள் $CO_2$ உமிழ்வை நிகர பூஜ்ஜிய உமிழ்வுகளுடன் 2050இல் (NZE) சீரமைக்க முடியும் என International Energy Agency (IEA) குறிப்பிடுகின்றது. மின்சார வாகனங்களின் கார்பன் தடம் தொடர்ந்து குறைந்து வருகிறது, மேலும், புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் அதிகரிப்பால் இது மேலும் குறையும். புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களினால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தால் இயங்கும் மின்சார வாகனங்கள் பாரம்பரிய வாகனங்களுடன் ஒப்பிடும்போது, 50% வரை கார்பன் உமிழ்வுகளைக் குறைக்கின்றன. மின் மயமாக்கத்திற்கு பெரும்பாலும் புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மின்சார வாகனங்கள் மின்கலம் மூலம் மின்சாரம் சேமிக்கப்பட்டு தேவைகளின் போது, பயன்படுத்த உதவுகிறது. குறிப்பாக, சூரிய சக்தி மற்றும் காற்று சக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்து சேமிக்கப்பட்டு வைக்கப்படுகிறது. புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களால் சூழல் பாதுகாப்பு மற்றும் வேலைவாய்ப்பு கிடைக்கப்பெறுகின்றன. நகர்ப் புறங்களில் அதிக ஒலி மாசுபாட்டை ஏற்படுத்துவது எம் பாரம்பரிய வாகனங்கள் செல்வாக்கு செலுத்துகிறது. அந்த வகையில், மின்சார வாகனங்கள் குறைவான ஒலி எழுப்புவதால் ஒலி மாசுபாடு கட்டுப்படுத்தப்படுகின்றது.

இயற்கை வளங்கள் பாதுகாக்கப்படுகின்றன. அதாவது மின்சார வாகனங்கள் பாரம்பரிய பெட்ரோல் அல்லது டீசல் ஆகிய எரிபொருட்களுக்கு மாற்றாக மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றன. காற்று மாசுபாடு குறைந்தால் விவசாய நிலங்களும் நீர் வளங்களும் பாதிக்கப்படுவதில்லை. இதனால் எரிபொருள் தேக்கத்தின் மீது அழுத்தம் குறையும், எண்ணெய் மற்றும் நிலக்கரி பயன்பாடு குறைவடையும். மின்சார வாகனங்களில் பயன்படுத்தப்படும் மின்கலங்கள் மறு சுழற்சி செய்யக்கூடியவை. இது வளங்களைப் பாதுகாக்க உதவுகிறது. உதாரணமாக இலங்கையில் சூரிய சக்தியைப் பயன்படுத்தி சார்ஜ் செய்யும் மின்சார வாகனங்கள் அதிகரித்து வருவதால் எரிபொருள் இறக்குமதி மீது அழுத்தம் குறைந்துள்ளது. மின்சார வாகனங்களின் சார்ஜிங் உள்கட்டமைப்பு பல நாடுகளில் முன்னேற்றம் அடைந்துள்ளன. மேலும், பராமரிப்பு செலவுகள் எரிபொருள் வாகனங்களை விட இவற்றில் குறைவாகக் காணப்படுகின்றது.


உலகளவில் நிறுவனங்கள் பசுமை தொழில்நுட்பங்களை முன்னோக்கி முன்னேற்றுவதால் இயற்கை வளங்களின் அழிவுகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. சுற்றுச்சூழல் பாதிப்புகளைத் தணிப்பதற்கான ஒரு சாத்தியமான தீர்வு மின்சார வாகனங்கள் காணப்பட்டாலும் கூட ஒரு குறிப்பிட்ட அளவு சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பை விளைவிக்கின்றன. நிலக்கரி போன்றவற்றை எரிப்பதன் மூலம் கிடைக்கும் மின்சாரத்தைத் தானே இவை பயன்படுத்துகின்றன. நிலக்கரி எரிக்கும்போது, நச்சு வாயுக்கள் வெளியேற்றுவது புவி வெப்பமயமாதல் மற்றும் அமில மழையை ஏற்படுத்துகின்றது. நிலக்கரி சுரங்க அகழ்வு நடவடிக்கைகள் உயிரினங்களின் வாழிடங்கள் அழிக்கப்படுகின்றன. மேலும், நீர் வளங்கள் மாசுபடுத்தப்படுகிறது.


இந்த வகையில், பார்த்தால் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பில்லாத என்று கூற முடியாது. மின்சார வாகனங்கள் மின்கலங்களால் இயங்குகின்றன. எனவே, இந்த மின்கலங்களைத் தயாரிப்பதற்கு லித்தியம், நிக்கல் மற்றும் கோபால்ட் போன்ற அரிய உலோகங்கள் பிரித்தெடுத்தல் செயல்முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. பெரும்பாலும் லித்தியம் உவர் நில உப்பு நீரிலிருந்து எடுக்கப்படும். இச்செயல் முறைக்குப் பல கோடி லிட்டர் நீர் தேவைப் படுகிறது. இதனால் நிலத்தடி நீர் மாசுபாடு, நில அழிவு, மண் வளம் குன்றுதல் போன்ற தாக்கங்களுக்குச் சூழல் முகம் கொடுத்து வருகின்றன.

பழுதடைந்த மின்சார வாகனங்களை அகற்றுவதில் சுற்றுச்சூழலுக்கு சேதத்தை ஏற்படுத்துகின்றன. முறையற்ற அகற்றல் செயல்முறையினால் நீர்நிலைகளையும் நிலத்தையும் பாதிக்கின்றன. மேலும், உயிர்ப் பல்வகைமை பாதிக்கப்படலாம்.

இவ்வாறு மின்சார வாகனங்கள் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தினாலும், எரிபொருள் வாகனங்களோடு ஒப்பிடுகையில், குறைவான சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்கள், மின்கல மறுசுழற்சி தொழில்நுட்பங்கள் மேம்படுத்தப்படுவதால் மின்சார வாகனங்கள் சூழலுக்கு நன்மை பயக்கும்.

மின்சார வாகனங்கள் சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார சவால்களுக்கு ஒரு சிறந்த தீர்வாக அமைந்துள்ளதோடு, திட்டமிட்ட நடைமுறைகள் மற்றும் முதலீடுகள் மூலம் மின்சார வாகனங்கள் ஒரு நாட்டின் போக்குவரத்து துறையை மாற்றி அமைத்து எதிர்காலத்தில் நிலையான வளர்ச்சிக்கு வழிசமைக்கும்.





### சீரற்ற காலநிலையால் ஏற்படும்

# உளவியல் தாக்கம்



பா.ரோஜனகுமார்,
ஊடகத்துறை,
இரண்டாம் வருடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

சீரற்ற காலநிலை என்பது உலகம் முழுவதும் பல்வேறு பகுதிகளிலும் நிகழ்ந்து வரும் இயற்கை மாற்றங்களின் விளைவாக விளக்கப்படுகிறது. காலநிலை மாற்றம், வளிமண்டல மாற்றங்கள், மற்றும் மழை, புயல்கள் போன்றவை மனிதன் மற்றும் பரிமாணங்களை நேரடியாக அல்லது மறைமுகமாகப் பாதிக்கின்றன. இது மனிதர்கள் மற்றும் சமூகம் மீது மிகுந்த உளவியல் தாக்கங்களை ஏற்படுத்துகிறது. குறிப்பாக, சில குறிப்பிட்ட காலநிலையிலான மாற்றங்கள், அதாவது கடுமையான வெப்பம், பனிப்பொழிவு, மழை, புயல்கள் மற்றும் சூறாவளிகள் போன்றவை உளவியல் நிலைகளை பாதிப்பதாகும். இவை மனப்பதற்றம்,, கவலை, வேதனை போன்ற பிரதிபலிப்புகளை உருவாக்குகின்றன.

## பதட்டம் மற்றும் கவலை

சீரற்ற காலநிலை பல சமயங்களில் பதட்டத்தை உண்டாக்குகிறது. அதாவது, வெப்ப அலைகள் அல்லது மழையுள்ள பருவங்களால் அடிக்கடி பாதிக்கப்படும் இடங்களில் வாழும் மக்கள் மனதில் பயம், கவலை மற்றும் பதட்டத்தை எதிர்கொள்கின்றனர். புவி வெப்பமடைதல் காரணமாக, இயற்கை பேரழிவுகள் அதிகரித்து, மக்களுக்குள் அதீத குழப்பத்தை உருவாக்குகின்றன. குறிப்பாக, கடும் சூறாவளிகளின் எச்சரிக்கை, வேகமாக நகரும் புயல்கள் அல்லது நிலநடுக்கங்கள் போன்றவை அச்சத்தையும், மன அழுத்தத்தை அதிகரிக்கின்றன.

## துன்பம் மற்றும் வேதனை

சீரற்ற காலநிலைகள், யதார்த்தமாக, சமூகத்தில் துன்பம் மற்றும் வேதனையை உருவாக்குகின்றன. பெரும்பாலும், இயற்கை பேரழிவுகள் பெரும் நஷ்டங்களை ஏற்படுத்துகின்றன, உதாரணமாக, பெரும்பாலான வீடுகள் இடிந்து வீழ்ந்து போகின்றன, பயிர்கள் அழிந்து பல குடும்பங்கள் உழைப்பில் இருந்து விலகுகின்றனர். இது போன்ற விடயங்கள் மக்களின் மனதிற்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்துகிறது. மக்களின் உளவியல் நிலையை மாற்றுவதற்கும், அவர்கள் வாழும் சூழலைப் புரிந்து கொள்ளும் மனப்பாடங்களை அவர்களுக்கு ஏற்படுத்துகின்றன.

## நிலைத்தன்மை குறைபாடு

சீரற்ற காலநிலை, குறிப்பாக, பெரும் மண்சரிவு அல்லது கடும் மழைகள் போன்றவை, சமூகத்தின் திடமான நிலைத்தன்மைக்கு ஆபத்தாக மாறுகின்றன. மனிதர்கள் குறிப்பாக பூர்வீக மற்றும் தொழில்நுட்ப துறைகளில் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். இது தொழிலாளர்களின் உழைப்பின் அளவை குறைக்கும் மட்டுமல்லாது, அவர்களின் மனநிலையையும் பாதிக்கின்றது. மக்களிடையே எதிர்மறை உணர்வுகள் அதிகரித்து, அவர்களுக்குள் நேர்த்தியான மன அழுத்தம் ஏற்படும்.

## உற்சாகம் மற்றும் நீண்டகால மனநிலை பாதிப்புகள்

பெரிய அளவில், சீரற்ற காலநிலையால் ஏற்படும் உளவியல் தாக்கம், ஒரு மனிதனின் மனநிலையை வெறும் எதிர்மறையான மனப்பதற்றத்தில் மட்டுமல்லாது, நீண்டகால மனநிலை பாதிப்புகளாகவும் மாற்றிவிடும். குறிப்பாக, எப்போதும் பேரழிவு, வெப்ப அலை அல்லது மழையுள்ள நிலங்கள், மனதிற்கு அழுத்தம் மற்றும் வாழ்க்கையைத் தொடர்வதற்கான ஆர்வத்தை இழக்கச் செய்யும். இது, சுயப்பூரண மற்றும் குழுமப்பூரண உணர்வுகளுக்குத் தீங்கு விளைவிக்கும்.

## சமூகத்தின் உளவியல் தாக்கம்

ஒரே பருவத்தில் பல இடங்களில் நடைபெறும் சீரற்ற காலநிலைகள், சமூகத்தின் நம்பிக்கையைப் பாதிக்கும். ஒருவரின் மனநிலையை மட்டுமல்லாமல், அவற்றின் விளைவாக சமூகத்திற்குத் தேவையான பொது உளவியல் ஆதரவையும் குறைக்கின்றன. பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள், மிகுந்த உளவியல் ஆதரவு மற்றும் உதவிகளைத் தேடி வருகின்றனர். சமூகத்தில் உறுதியான ஆதரவின்மை, சமூகத்தின் கலாச்சாரம், ஒற்றுமை, மற்றும் இன்பத்துக்கான எதிர்பார்ப்புகளை அதிகரிக்கின்றன.

தெற்காசியாவின் சனத்தொகையில் ஏறத்தாழ அரைவாசி அளவிலானோர் அபாய வலயங்கள் எனப்படும் மிகவும் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளிலே வாழ்ந்து வருவதாகப் பல ஆய்வுகள் எடுத்துக்காட்டுவதுடன், பயிர் விளைச்சல் குறைவடைதல், குறைவடையும் தொழிலாளர் உற்பத்தி வினைத்திறன் மற்றும் சுகாதார தாக்கங்கள் ஆகியன காரணமாக அங்கு வாழும் மக்களின் வாழ்க்கைத்தரமும் வீழ்ச்சியடையக்கூடும். மிகக் குறைவாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளமை, மோசமான இணைப்புக்களைக் கொண்டிருத்தல் மற்றும் நீர்ப் பற்றாக்குறை பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்திருப்பதனால் இந்த அபாய வலயங்களில் உள்ள மக்கள் சிலர் பெருமளவில் பாதிப்படைகின்றனர். இலங்கையின் வடக்கு மற்றும் வடமேற்கு மாகாணங்கள் 2050ஆம் ஆண்டளவில் அதிகரித்த சராசரி வெப்பநிலையையும் அதிகமான மழைவீழ்ச்சி மாற்றத்தையும் அனுபவிக்கக்கூடிய அதிகமான சாத்தியக்கூறுகளை எதிர்நோக்கியிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டு பரிஸ் உடன்படிக்கையில் பரிந்துரைக்கப்பட்டதற்கு அமைவாக, காபன் வெளியேற்றத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படினும், இலங்கையின் சராசரி வருடாந்த வெப்பநிலையானது 2050ஆம் ஆண்டளவில் 1.0 பாகை செல்சியஸ் முதற்கொண்டு 1.5 பாகை செல்சியஸ் வரையில் அதிகரிக்கக்கூடும் என பகுப்பாய்வுகளிலிருந்து தீர்மானிக்க முடியும். எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாவிடின், இலங்கையின் சராசரி வெப்பநிலை 2.0 பாகை செல்சியஸ் வரை அதிகரிக்கும் சாத்தியமும் உண்டு. அதிகரித்த வெப்பநிலையானது மக்களின் மன அழுத்தத்திற்கான முக்கிய காரணிகளில் ஒன்றாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

காலநிலை மாற்றங்கள் குறைவான தனி நபர் வருமானத்திற்கு வழிகோலுவதுடன், அது தெற்காசியா முழுவதிலும் வறுமை மற்றும் சமத்துவமின்மையை அதிகரிக்கும் என தெற்காசியப் பிராந்தியத்திற்கான உலக வங்கியின் முதன்மை பொருளியலாளர்களில் ஒருவரான முத்துக்குமார மணி என்பவர் தெரிவித்ததுடன், காலநிலை மாற்றத்தினால் அபாயத்தை எதிர்நோக்கியுள்ள பகுதிகளை இனங்காண்பது குறிப்பிட்ட பகுதிகள் மற்றும் அங்கு வாழும் சமூகங்களுக்கு மிகவும் அவசியமான வளங்களையும் அவர்களுக்குத் தேவையான உதவி நடவடிக்கைகளையும் முன்னுரிமைப்படுத்துவதற்குக் கொள்கை வகுப்பாளர்களுக்கு உதவும் என மேலும் குறிப்பிட்டார்.

சீரற்ற காலநிலையால் ஏற்படும் உளவியல் தாக்கங்கள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை. மனிதர்கள், தங்கள் வாழ்வின் உணர்வு நிலைகளை உளவியல் பாதிப்புகளால் சந்திக்கின்றனர், இதனால் அவர்களின் வாழ்க்கை முறையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படும். இதற்கு எதிரான செயற்கைக் குழுக்கள், சமூக ஆதரவு, திடமான போதனைகள் போன்றவை மிக முக்கியமாக உள்ளன.

உளவியல் உதவிகள் மற்றும் முன்னேற்றத்தின் மூலம் மக்கள் மனநிலையைச் சீராக்குவதன் மூலம், இந்த காலநிலை மாற்றங்களின் தீவிர விளைவுகளையும் சமாளிக்க முடியும்.

# “குரலை ஒலிக்கச் செய்யவும்

மெய்யன்

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறை செயற்பாட்டு வாரத்தை முன்னிட்டு கண்டி மாவட்ட 'பருவதக் கீற்று' வலையமைப்பு ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்ட பேரணியும் பொதுக்கூட்டமும் கண்டி பன்விலை நகரில் உணர்வு பூர்வமாக நடைபெற்றது.

பன்விலை மடகல பிரிவு, ஹாகல பிரிவு, மடுல்கல மேற்பிரிவு, மடுல்கல கீழ்ப்பிரிவு, உனனகல பிரிவு, கலாபொக்க பிரிவு போன்ற தோட்டங்களைச் சேர்ந்த இளைஞர்கள்,யுவதிகள் என பெற்றோர்களும் இந்நிகழ்வில் பங்குகொண்டு தமது பங்களிப்பைச் செய்திருந்தனர்.

“பெண்கள் மீதான வன்முறைகளை தடுப்பதற்கு பெண்கள் மட்டுமல்லாமல், ஆண்களும் முன்வரவேண்டும்” என கண்டி சமூக அபிவிருத்தி நிறுவக திட்ட முகாமையாளர் யோகேஷ்வரி கிருஷ்ணன் கருத்துரைத்தார்.

பன்விலை பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் T.M.I.பிரியங்கனி, மஞ்சுளா உடகும்புர, சமூக செயற்பாட்டாளர் A.சிந்துநதி ஆகியோரும் உரையாற்றினார்கள்

பெண்கள் மீதான வன்முறை என்றால் என்ன? என்பது குறித்துத் தொடர்ந்து உரையாற்றிய யோகேஸ்வரி. பெண்களுக்கு உடல், உள அல்லது பால் ரீதியாகத் தீங்கை, துன்பத்தை, வருத்தத்தை, அச்சுறுத்தல்களை விளைவிக்கக் கூடியதும், அவர்களது சுதந்திரத்தை மறுத்தல், இழிவான வார்த்தைகளால் தாக்குதல், தூசன வார்த்தைகளை பிரயோகித்தல், அடித்தல், பலாத்காரம், வெளியில் செல்ல விடாது தடுத்தல், சித்திரவதை, அதிகமான வீட்டு வேலைகளை சுமத்துதல், வேலைத்தள உழைப்பு சுரண்டல், பொருளாதாரத்தை கட்டுப்படுத்தல், உடலுறுப்புகளை கூறி கிண்டல் செய்தல், முத்தமிடல், தொடுதல், உரசுதல், இடித்தல் போன்ற அனைத்து செயல்களும் பெண்களுக்கெதிரான வன்முறைகளாகும் என்றார்.

பொதுப் போக்குவரத்தில் இடம்பெறுகின்ற பாலியல் வன்முறைகள் வாய்ச்சொல் மற்றும் பாவனைகள் (உடல் அசைவுகள்) மூலம் பெண்களைக் கேலி செய்தல், சீண்டல் செய்தல் என்பன 1995ஆம் ஆண்டு தண்டனைக் கோவை உறுப்புரை 345 இற்கு கொண்டுவரப்பட்ட இலக்கம் 22 திருத்தச் சட்டத்தின்படி, தண்டனைக்குரிய குற்றமாகும். முறைப்பாடுகளுக்கு 1938 என்ற இலக்கத்திற்கு அழைக்க முடியும். பொது இடங்களில் பாலியல் வன்முறைகள் ஒழுக்கக்கேடான வருத்தமூட்டும் சொற்பிரயோகம், துன்மார்க்கமான கருத்துக்கள், பாலியல் ரீதியான தந்திரமான குறிப்பீடுகள், தொல்லையளிக்கும் அழைப்புக்கள், கடிதத்தொடர்பு, வதந்திகள் ஊர்வம்பு, அவதூறு, (நக்கல்) பரிகாசம், விசில் அடித்தல், பாலியல் சமிக்ஞைகள், பாலியல் தன்மையிலான நடத்தை என்பன இலங்கை சட்டத்தின் கீழ், ஒரு குற்றவியல் குற்றம்.

பாலியல் தொல்லை குறித்து குற்றவாளியாகக் காணப்படும் ஒரு நபருக்குப் பின்வருமாறு தண்டனை வழங்கப்படும். 5 வருடங்கள் சிறை அல்லது 5 வருடக் கடூழிய சிறைத் தண்டனை, அபராதம் அல்லது சிறைத் தண்டனை உட்பட அபராதம் அல்லது பலியானவருக்கு நட்டஈடு கொடுப்பனவு செய்வதற்கு உத்தரவிடுதல். 2005ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க, குடும்ப (வீட்டு) வன்முறை செயல் தடுப்புச் சட்டத்தின்படி, வீட்டு வன்முறை என்பது குடும்பத்தின் ஒரு அங்கத்தவர் அதே குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரை அல்லது வேறொரு குடும்ப உறுப்பினரை அடித்தல், அச்சுறுத்தல், ஆக்கிரமித்தல் உட்பட மன அழுத்தங்களை ஏற்படுத்தும் செயல்களைச் செய்தல், அவமரியாதைக்கு உட்படுத்தல், நம்பிக்கையைச் சிதைத்தல் அல்லது துஷ்பிரயோகம் செய்தல் என்பனவாகும். இவை அனைத்துமே தண்டனைக்குரிய குற்றங்களாகும். இத்துன்புறுத்தல் வீட்டுச் சூழலிலேயே நடைபெற வேண்டுமென்பது அவசியமல்ல. ஆனால், இது வீட்டிற்கு வெளியிலும் நடைபெறலாம். மேலும் தேசிய மற்றும் சர்வதேச அறிக்கைகளில் குடும்ப வன்முறைகளால் பெண்களே அதிகம் பாதிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. எனவே, தொடர் விழிப்புணர்வூட்டல் மூலம் ஆண்களுக்குச் சிந்தனை அல்லது கண்ணோட்டம் ரீதியான மாற்றங்கள் ஏற்படுத்தப்படுவது அவசியமாகும்.

1998ஆம் ஆண்டு 20ஆம் சரத்து 2ஆம் பிரிவு, குற்றவியல் கோவைச் திருத்தச் சட்டத்தின்படி, குழுவாக பாலியல் வன்முறைகளில் (பலாத்காரம்) ஈடுபடுபவர்களுக்கு கிடைக்கும் தண்டனைகள்?

20 வருடங்கள் வரையிலான கடூழியச் சிறைத்தண்டனை அல்லது 10 வருடங்களுக்கு அதிகமான சிறைத் தண்டனை அத்துடன் தண்டப்பணமும் அபராதமாக அறவிடப்படும் மேலும் நீதிமன்றம் பாதிக்கப்பட்டவருக்கு நட்டஈடு செலுத்தவும் கட்டளையிடும்.

வேலைத்தள வன்முறை மற்றும் துன்புறுத்தல்களுக்கான சமவாயம் 190 தனியார் மற்றும் அரச துறைகளில் பணிபுரியும் பெண்கள் வேலைத்தளத்தில் பாலியல் சீண்டல்களுக்கு ஆளாகிய போதிலும், அதற்கெதிராக முறைப்பாடுகள் செய்வதில்லை. அத்துடன், பாலியல் சீண்டல்கள் என்றால் என்ன மற்றும் அவ்வாறு நடைபெற்றால் அதுபற்றி முறையிடுவதற்கு உரிய இடமின்மை போன்ற காரணங்களால் பெண்கள் பாலியல் சீண்டல்களைச் சகித்துக்கொண்டு பணியாற்றும் சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இப்பாலியல் சீண்டல்கள் இன்று பாரியளவில் நடைபெற்று வருவதுடன், இவ்விடயம் பற்றி பெண்கள் பேச ஆரம்பித்துள்ளனர். உலக தொழிலாளர் ஸ்தாபனம் பாலியல் சுரண்டல்கள் என்றால் என்ன என்பதற்கு வரைவிலக்கணம் கொடுத்துள்ளதுடன், பாலியல் சீண்டல்கள் தொடர்பாக சமவாயம் 190இனை 2019இல் பிரகடனப்படுத்தியுள்ளது. சி190 சமவாயம், பாலின அடிப்படையிலான வன்முறை மற்றும் துன்புறுத்தல் உட்பட தொழில் உலகில் வன்முறை மற்றும் துன்புறுத்தல்களை வரையறுக்கவும், தடுக்கவும், தடைசெய்யவும் அரசாங்கங்கள் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று கோருகிறது.

தொழில் உலகில் பாலின அடிப்படையிலான வன்முறை மற்றும் துன்புறுத்தல் என்றால் என்ன? என்பது தொடர்பாக இவ்வாறான வன்முறை என்பது ஒருவரின் பால் அல்லது பாலினம் காரணமாக அவர்களை நோக்கிச் செய்யப்படும் துன்புறுத்தல் அல்லது ஒரு குறிப்பிட்ட பாலினம் அல்லது பாலினத்தின் நபர்களை விகிதாசாரமற்ற முறையில் பாதிக்கும். பாலியல் துன்புறுத்தல் அடங்கும் என இச்சமவாயம் வரையறுக்கின்றது. பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் துன்புறுத்தல்கள் அவர்கள் பெண் என்பதன் அடிப்படையிலான வன்முறை, துன்புறுத்தல் என்பதால் அதுவும் பாலின ரீதியான வன்முறையாகும். உ-ம், கர்ப்பிணிப் பெண்களைக் கொடுமைப்படுத்துதல், பாலியல் மற்றும் இழிவுபடுத்தும் அவமதிப்புகள். பாலினம் அல்லாத பிரிவினர் என்று கருதப்படும் நபர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் துன்புறுத்தல் ஆகியவை பாலின அடிப்படையிலான வன்முறை, துன்புறுத்தலாக இருக்கும். இச்சமவாயத்தினுள் யார் உள்ளடக்கப்படுகிறார்கள்? தொழில் உலகில் உள்ள அனைத்து தனிநபர்களையும் உள்ளடக்குகின்றது. தேசிய சட்டம் மற்றும் நடைமுறையால் வரையறுக்கப்பட்ட ஊழியர்கள், அவர்களின் ஒப்பந்த நிலையைப் பொருட்படுத்தாமல் வேலை செய்யும் நபர்கள். உ-ம், தற்காலிக முகவர் தொழிலாளர்கள், சுயேச்சை தொழிலாளர்கள், வணிக தளத்தின் மூலம் பணியமர்த்தப்பட்ட தொழிலாளர்கள்) பயிற்சியில் உள்ள நபர்கள் உட்பட பயிற்சியாளர்கள் மற்றும் பயிலுநர்கள் -வேலையிலிருந்து நிறுத்தப்பட்டுள்ள தொழிலாளர்கள், தொண்டர்கள், வேலை தேடுபவர்கள், வேலை விண்ணப்பதாரர்கள் மற்றும் அதிகாரம், கடமைகள் அல்லது பொறுப்புக்களைப் பிரயோகிக்கும் ஒரு தனி தொழில் வழங்குநர்கள். இச்சமவாயமானது தனியார், பொது, முறையான, முறைசாரா பொருளாதாரம், நகர்ப்புற, கிராமப்புறங்களில் உள்ள அனைத்து துறைகளுக்கும் பொருந்தும்.

கண்டி மாவட்ட 'பருவக் கீற்று' வலையமைப்பின் பொருளாளர் ஆறுமுகம் நவஜீவனி இவற்றோடு தொடர்புடைய பல்வேறு விடயங்களைப் பகிர்ந்து கொண்டார்.

பாலியல் சீண்டல் என்பது பின்வரும் செயல்களை உள்ளடக்கும் -பெண்களுக்கு ஆண்களால் நிகழும் சீண்டல்கள் - ஆண்களுக்குப் பெண்களால் நிகழும் சீண்டல்கள் - ஒரே பாலினத்தவர் (பெண்கள் பெண்களை, ஆண்கள் ஆண்களை) சீண்டல் செய்தல்-சக துன்புறுத்தல் -மேற்பார்வையாளர்களால் கீழ் நிலை ஊழியர்களை சீண்டலுக்குட்படுத்துதல் - கீழ்நிலை ஊழியர்களால் மேல்நிலையாளர்களை சீண்டலுக்குட்படுத்துதல் -ஊழியர் அல்லாத ஒருவர் அதாவது, வாடிக்கையாளர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், விற்பனையாளர்கள், புறச் சேவை ஊழியர்கள் மற்றும் சேவை வழங்குநர் ஆகியன மூன்றாம் தரப்பினரால் ஏற்படும் துன்புறுத்தல் பௌதீக ரீதியான (உடல்) சீண்டலுக்கான உதாரணங்களாக தேவையற்ற முறையில் உடல் ரீதியான தொடர்பை ஏற்படுத்தல், தேவை இல்லாமல் ஒருவருடன் நெருங்கி நிற்றல் (அருகாமையில் நெருக்கமாக நிற்றல்), தொடுதல், பாசமாகச் செல்லமாகப் பேசுதல், தொட்டுத் தடவுதல், உடலை அழுத்துதல், கட்டிப்பிடித்தல் அல்லது கிள்ளுதல், ஒருவரது பிறப்புறுப்பைத் தேய்த்தல் அல்லது உரசல், பாலியல் வன்புணர்ச்சி வாய்மொழி மூலமான பாலியல் சீண்டல், பாலியல் கருத்துக்கள் அல்லது குறிப்புக் கூறல், ஒருவரின் பாலியல் அடையாளத்தை அல்லது ஒருவரது பாலினத்தைக் கேலி செய்தல், ஒருவரின் உடல் தோற்றம், வயது, தனிப்பட்ட வாழ்க்கை, அவர்களின் வாழ்கை நிலை அதாவது அவர் திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா மற்றும் குழந்தைப்பேறு உள்ளமை அல்லது இல்லாமை ஆகியவை பற்றி கருத்துக்கூறல், ஒருவரிடம் பாலியல் ரீதியாகத் தொடர்புடைய நகைச்சுவைகள் அல்லது கதைகள் கூறல், ஒருவரின் பாலியல் ரீதியான கனவு, கற்பனைகளை விசாரித்தல் வேலை தொடர்பான கலந்துரையாடல்களை பாலியல் ரீதியான தலைப்புகளுக்கு திசைமாற்றல் பாலியல் ரீதியான உபகாரங்களைக் கேட்டல் வேலை வாய்ப்பிற்காக பாலியல் ரீதியான உபகாரங்களைக் கேட்டல் விசில் அடித்தல் அல்லது பாலியல் ரீதியான ஒலியை எழுப்புதல் ஆபாசமான மற்றும் தவறான மொழியைப் பிரயோகித்தல் அடையாளமற்ற தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தல் விரும்பத்தகாத சமூகம்சார் அழைப்பை மீண்டும், மீண்டும் செய்தல் அவதூறுகள், வதந்திகளைப் பரப்பல் மற்றும் அதைப் பற்றி அரட்டை செய்தல் (புறம்பேசல்) பாலியல் ரீதியான சைகைகள் - வெறித்துப் பார்த்தல், ஏளனமாக வெறுப்புடன் சாய்வாக நோக்குதல், கீழ் கண்ணால் பார்த்தால், கண்ணடித்தல் அல்லது பார்த்தல் - பறக்கும் முத்தம் கொடுத்தல், நாக்கை சுழற்றுதல் அல்லது தனது உதட்டை நாக்கால் நக்குதல் -கைகளால், விரல்களால் பாலியல் ரீதியான செய்கைகள் செய்தல், பாலியல் ரீதியான செயல்களை நடித்துக் காட்டல் காட்சிப்படுத்தல் தொடர்பான பாலியல் சீண்டல் தேவையற்ற மின்னஞ்சல்கள், குறுஞ்செய்திகள் அனுப்புதல் அல்லது பாலியல் தொடர்புடைய வெளிப்படையான நகைச்சுவைகளை பதிவிடல் அடையாளம் தெரியாத நபராகக் கடிதங்கள், மின்னஞ்சல்கள், பேஜர் குறுஞ்செய்தி அல்லது குறுந்தகவல் அனுப்புதல், முறையற்ற ரீதியாக சமூக வலைத்தளங்களில் முன்னேறுதல், பாலியல் ரீதியான வரைபுகள், எழுதுதல் பாலியல் ரீதியான படங்கள், புகைப்படங்கள், சுவரொட்டிகளில், நாட்குறிப்பு, கணினித் திரை வால்பேப்பர் அல்லது பாலியல் தொடர்பான வலைத்தளங்களை வெளிப்படையாக காட்சிப்படுத்தல் வேறு ஒருவருடைய பாலியல் தொடர்புடைய, அவர்களுக்குத் தெரியாமல், அவர்களின் விருப்பமின்றி எடுக்கப்பட்ட புகைப்படங்கள், நிகழ் படங்களைப் பதிவிடல். சமவாயம் 190இனை தேசிய சட்டமாக்குவதற்கான உபாயங்கள் இப்பிரகடனத்தில் கையொப்பம் இடும்படி இலங்கை அரசாங்கத்தினை நிர்ப்பந்திக்க வேண்டியுள்ளது.

இது தொழிற்சங்கங்களினதும், தொழிலாளர்களினதும் கடமையாகும். இப்பிரகடனத்தில் இலங்கை கையொப்பமிட்டால் பாலியல் சீண்டல்கள் தொடர்பான புதிய சட்டமொன்றினை இலங்கை அரசாங்கம் உருவாக்க நேரிடும். அப்படி நடைபெறின் இலங்கையின் பெண், ஆண் தொழிலாளர்கள் பாலியல் சீண்டல்களுக்கு ஆட்படாத தொழிலாளர்களாக பணியாற்றும் வாய்ப்பு ஏற்படும். ஆகையால் பெண் தொழிலாளர்கள் இவ்விடயம் தொடர்பில் தமது குரலை முதலாவதாக ஒலிக்க செய்ய வேண்டியுள்ளது. அத்துடன், சமூக மட்டத்திலான விழிப்புணர்வூட்டல் உட்பட கொள்கை வகுப்போருக்கு ஏற்புரை மற்றும் பரப்புரைகளைச் செய்தல். தொழில் தருநர்களுடனான கலந்துரையாடலை ஏற்படுத்தல். வீதி நாடகம், துண்டு பிரசுரங்களை விநியோகித்தல், சமூக வலைத்தளங்கள் ஊடாக அறிவூட்டல் போன்ற காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.






















சிரியா

சிரியாவின் தலைநகர்

# கிளர்ச்சியாளர்களின் வசமானது

சிரியாவின் தலைநகர் டமாஸ்கசை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

இதேவேளை, அவர்கள் ஹோம்ஸ் நகர் நோக்கி முன்னேறி வருகின்றனர். இந்நகரைக் கைப்பற்றினால், கிளர்ச்சியாளர்களின் கை ஓங்கும் என கூறப்படுகிறது.

சிரிய நாட்டில், ஜனாதிபதி பஷார் அல்-ஆசாத் தலைமையிலான அரசு நடந்து வருகிறது. எனினும், அந்நாட்டில் 2011ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. இதில், 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டு உள்ளனர் என ஐ.நா. அமைப்பு தெரிவிக்கின்றது.

இந்த எண்ணிக்கையை விட 2 மடங்கு அதிகம் (6 இலட்சம்) என சிரியாவின் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவிக்கின்றது.

சில ஆண்டுகளாகப் பெரிய அளவில் வன்முறை எதுவும் ஏற்படாத நிலையில், கடந்த வாரம் மீண்டும் கிளர்ச்சி வெடித்தது. அதிபர் பஷார் அல்-ஆசாத் தலைமையிலான அரசுக்கு எதிராகக் கிளர்ச்சியாளர்கள் போரில் ஈடுபட்டு வருகின்றனர். இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையே போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட நிலையில் இந்த கிளர்ச்சி வெடித்துள்ளது.

சிரியாவில் உள்ள அலெப்போ மற்றும் ஹமா பகுதிகளைக் கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றி உள்ளனர். அவர்கள் ஹோம்ஸ் நகர் நோக்கி முன்னேறி



வருகின்றனர். இதனால், ஆயிரக்கணக்கான மக்கள் அப்பகுதியில் இருந்து தப்பியோடி வருகின்றனர். இந்நகரைக் கைப்பற்றினால், கிளர்ச்சியாளர்களின் கை ஓங்கும் என கூறப்படுகிறது.

இந்த சூழலில், சிரியாவின் தலைநகர் டமாஸ்கசை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளது. இந்நகரைச் சுற்றிலும் குவிக்கப்பட்டிருந்த அரசுப் படை வீரர்கள் அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றது.

கிளர்ச்சியாளர்கள் தலைநகரைக் கைப்பற்றியதால் சிரியா ஜனாதிபதி பஷார் அல்-ஆசாத் டமாஸ்கசை விட்டு வெளியேறினார்.

இதனைத்தொடர்ந்து தலைநகர் டமாஸ்கஸ் எல்லைப் பகுதியில் பஷார் அல்-ஆசாத்தின் தந்தை சிலையைக் கிளர்ச்சியாளர்கள் உடைத்தனர். மேலும் டமாஸ்கசில் முக்கிய சிறையிலிருந்து கைதிகளைக் கிளர்ச்சியாளர்கள் விடுவித்துள்ளனர்.

இது தொடர்பாகக் கிளர்ச்சியாளர்கள் அமைப்பின் மூத்த தளபதி ஹசன் அப்துல் கானி தனது வாட்ஸ்-அப் பதிவில், "டமாஸ்கஸ் நகரத்தை பஷர் அல்-ஆசாத்திடமிருந்து விடுவித்ததாக நாங்கள் அறிவிக்கிறோம். உலகம் முழுவதும் இடம்பெயர்ந்த மக்களே, சுதந்திர சிரியா உங்களுக்காகக் காத்திருக்கிறது" என்று தெரிவித்துள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளது.

இந்நிலையில், சிரியா நாட்டில் ஜனாதிபதி பஷார் அல்-ஆசாத் தப்பிச் சென்ற விமானம் மாயமாகி உள்ளதால் அங்குப் பதற்றம் ஏற்பட்டுள்ளது. ரஷ்யா உள்ளிட்ட சில நாடுகள், பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் சிரியா செல்வது என்பது ஏற்றுக் கொள்ள முடியாதது என கூறி வருகிறது. இதனால், மத்திய கிழக்கில் பதற்ற நிலை உருவாகியுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகம்

## மழை வேண்டி பிரார்த்தனை

ஐக்கிய அரபு அமீரகத்தில் மழை வேண்டி அந்நாட்டின் ஜனாதிபதி, ஆட்சியாளர்கள் மற்றும் மக்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் மழை பெய்ய வேண்டி, பொதுமக்கள் இறைவனிடம் பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும் என, அந்நாட்டின் ஜனாதிபதி ஷேக் முகம்து பின் சையது வலியுறுத்தினார்.

அமீரகத்திற்கு மழையும், இரக்கமும் அளித்து ஆசீர்வதிக்க வேண்டும் என வேண்டிக் கொள்ளுங்கள் என்றும் கூறினார்.

இதையடுத்து, ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த சலாத் அல் இஸ்திஸ்கா என்ற சடங்கு மற்றும் தண்ணீரின் முக்கியத்துவம் ஆகியவற்றுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் இமாம்கள் மற்றும் வழிபாட்டாளர்கள் கைகளை உயர்த்தி இறைவழிபாட்டில் ஈடுபட்டனர்.



இதில், அஜ்மன் ஆட்சியாளர் ஷேக் உமைத் பின் ரஷித் அல் நுவாமி, ராஸ் அல் கைமா ஆட்சியாளர் ஷேக் சவுத் பின் சாகிர் அல் குவாசிமி ஆகியோர் வழிபாட்டாளர்களுடன் இணைந்து நாடு முழுவதும் இஸ்திஸ்கா வழிபாட்டில், சனிக்கிழமை (7) ஈடுபட்டனர்.

இதில் தெய்வீக கருணை, அபரிமித மழைப்பொழிவு, வளம் செறிந்த பயிர்கள், அதிபர் மற்றும் அவரை பின்பற்றி நடக்கும் ஆட்சியாளர்கள் ஆகியோரை பாதுகாப்பு மற்றும் தேசத்தின் தலைவர்களுக்குத் தெய்வீக வழிகாட்டுதல் ஆகியவற்றிற்காக அவர்கள் இறைவழிபாட்டில் ஈடுபட்டனர்.

மும்பை

மகாராஷ்டிர துணை முதல்வரின்

## 1,000 கோடி ரூபாய் சொத்து விடுவிப்பு



மகாராஷ்டிர துணை முதல்வர் அஜித் பவார் மற்றும் அவரது குடும்பத்தினர் தொடர்புடைய 1,000 கோடி ரூபாய் (இந்தியப் பெறுமதி) மதிப்புள்ள சொத்துகளை வருமான வரித் துறை விடுவித்துள்ளது.

2019 நவம்பர் முதல் 2022 ஜூன் வரை மகாராஷ்டிராவில் காங்கிரஸ், சிவசேனா, தேசியவாத காங்கிரஸ் கூட்டணி அரசு ஆட்சி நடத்தியது. அப்போது தேசியவாத காங்கிரஸ் மூத்த தலைவர் அஜித் பவார் துணை முதல்வராகப் பதவி வகித்தார்.

கடந்த 2021 ஒக்டோபரில் அஜித் பவார், அவரது மனைவி, மகன் மற்றும் குடும்பத்தினருக்குச் சொந்தமான ஆலைகள், இடங்களில் வருமான வரித் துறையினர் சோதனை நடத்தினர்.

அப்போது பினாமி சொத்து பரிவர்த்தனை தடை சட்டத்தின் கீழ் அஜித் பவார் மற்றும் அவரது குடும்பத்தினர் தொடர்புடைய 1,000 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன.

இதுதொடர்பான வழக்கு மும்பையில் உள்ள தீர்ப்பாயத்தில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் அண்மையில் தீர்ப்பு வழங்கப்பட்டது. அந்த தீர்ப்பில், "ஒலைகள், சொத்துகள் தொடர்பான அனைத்து பரிவர்த்தனைகளும் வங்கி நடைமுறைகள் மூலமே நடைபெற்றுள்ளன. பினாமி முறையில் பணப் பரிவர்த்தனை நடைபெறவில்லை. எனவே 1,000 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துகளை விடுவிக்க வேண்டும்" என்று உத்தரவிடப்பட்டது.

இதை எதிர்த்துக் கடந்த நவம்பர் 5ஆம் திகதியன்று வருமான வரித் துறை சார்பில் தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த மேன்முறையீட்டைத் தீர்ப்பாயம் தள்ளுபடி செய்தது. இதைத் தொடர்ந்து அஜித் பவார் மற்றும் அவரது குடும்பத்தினர் தொடர்புடைய 1,000 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துகளை வருமான வரித் துறை விடுவித்துள்ளது.

புதுதில்லி


அமெரிக்காவில் இருந்து

## 519 இந்தியர்கள் நாடு கடத்தல்

அமெரிக்காவில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்த 519 இந்தியர்கள் நாடு கடத்தப்பட்டு இந்தியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக, மத்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் கீர்த்தி வர்தன் ஆசாத் தெரிவித்தார்.

மக்களவையில், சனிக்கிழமை (7), திரிணமூல் காங்கிரஸ் உறுப்பினர் மாலா ராய் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்துரைத்த மத்திய அமைச்சர் கீர்த்தி ஆசாத், "கடந்த 2023 நவம்பர் முதல் 2024 ஒக்டோபர் வரையிலான காலத்தில், அமெரிக்காவில் சட்டவிரோதமாக 519 இந்தியர்கள் தங்கியிருந்தனர். இதுதொடர்பாக அமெரிக்க அரசு விசாரணை நடத்தி,



அவர்களை நாடு கடத்தி இந்தியாவுக்கு அனுப்பியுள்ளது.

"வர்த்தக விமானங்கள் மூலமாகவும், வாடகை விமானங்கள் மூலம் அவர்கள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர். சட்டவிரோதமாகத் தங்கியிருந்த, போதிய ஆவணங்கள் அவர்கள் வசம் இல்லாமல் இருந்தது போன்ற காரணங்களுக்காக அவர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்" என்றார்.

இரண்டாவது டெஸ்டில்

# இந்தியாவை வீழ்த்திய அவுஸ்திரேலியா

இந்தியாவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டை அவுஸ்திரேலியா வென்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், அடிலெய்ட்டில் வெள்ளிக்கிழமை (06) ஆரம்பித்த இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா மிற்செல் ஸ்டார்க் (6), ஸ்கொட் போலண்ட் (2), அணித்தலைவர் பற் கமின்ஸிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து, சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 180 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில் நிதிஷ் குமார் றெட்டி 42, லோகேஷ் ராகுல் 37, ஷுப்மன் கில் 31, இரவிச்சந்திரன் அஷ்வின் 22, றிஷப் பண்ட் 21 ஓட்டங்களைப் பெற்றனர்.



பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, ட்ரெவிஸ் ஹெட்டின் 140, மர்னுஸ் லபுஷைனின் 64, நாதன் மக்ஸ்வீனியின் 39 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து 337 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஜஸ்பிரிட் பும்ரா 4, மொஹமட் சிராஜ் 4, நிதிஷ் குமார் றெட்டி 1, இரவிச்சந்திரன் 1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்நிலையில், தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, கமின்ஸ் (5), போலண்ட் (3), ஸ்டார்க்கிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 175 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில், றெட்டி 42, பண்ட் 28, கில் 28, யஷஸ்வி ஜைஸ்வால் 24 ஓட்டங்களைப் பெற்றனர்.

அந்தவகையில், 19 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ஹெட் தெரிவானார்.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## சமநிலையில் சிற்றி பலஸ் போட்டி

### பொரெஸ்டிடம் தோற்ற யுனைட்டெட்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், கிறிஸ்டல் பலஸின் மைதானத்தில் சனிக்கிழமை (07) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி சமப்படுத்தியது.

சிற்றி சார்பாக எர்லிங் ஹலண்ட், றிக்கோ லூயிஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். பலஸ் சார்பாக டேனியல் முனோஸ், மக்ஸென்ஸ் லக்ருொய்க்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற நொட்டிங்ஹாம் பொரெஸ்டுடனான போட்டியில் 2-3 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் தோற்றது. யுனைட்டெட் சார்பாக ரஸ்மஸ் ஹொஜ்லுண்ட், புருனோ பெர்னாண்டஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். பொரெஸ்ட் சார்பாக நிகொலா மிலென்கோவிச், மோர்கன் கிப்ஸ்-வைட், கிறிஸ் வூட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இத்தாலிய சீரி ஏ தொடர்:

## சமநிலையில் ஜுவென்டஸ் பொலொக்னா போட்டி

இத்தாலிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் சனிக்கிழமை (07) நடைபெற்ற பொலொக்னாவுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் ஜுவென்டஸ் சமப்படுத்தியது.

ஜுவென்டஸ் சார்பாக டெயுன் கூப்மைனர்ஸ், சாமுவேல் முக்குவாலா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். பொலொக்னா சார்பாக டான் என்டோயே, டொம்மஸோ பொபிகா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



ஸ்பானிய லா லிகாத் தொடர்:

## சமநிலையில் பார்சிலோனா றியல் பெட்டிஸ் போட்டி

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், றியல் பெட்டிஸின் மைதானத்தில் சனிக்கிழமை (07) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா சமப்படுத்தியது.

பார்சிலோனா சார்பாக றொபேர்ட் லெவன்டோஸ்கி, பெரன் டொரஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். பெட்டிஸ் சார்பாக ஜியோவனி லோ செல்ஸோ, அஸானே டியாயோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



நியூசிலாந்துக்கெதிரான

## தொடரைக் கைப்பற்றியது இங்கிலாந்து

நியூசிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடரை இங்கிலாந்து கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஏற்கெனவே வென்றிருந்த இங்கிலாந்து, வெலிங்டனில் வெள்ளிக்கிழமை(06) ஆரம்பித்து ஞாயிற்றுக்கிழமை (08) முடிவுக்கு வந்த இரண்டாவது போட்டியையும் வென்றமையையடுத்தே இன்னுமொரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: நியூசிலாந்து

இங்கிலாந்து: 280/10 (துடுப்பாட்டம்: ஹரி ப்றூக் 123, ஒலி போப் 66 ஓட்டங்கள். பந்துவீச்சு: நாதன் ஸ்மித் 4/86, வில் ஓ ரூர்க் 3/49, மற் ஹென்றி 2/43)

நியூசிலாந்து: 125/10 (துடுப்பாட்டம்: கேன் வில்லியம்சன் 37 ஓட்டங்கள். பந்துவீச்சு: குஸ் அட்கின்ஸன் 4/31, பிறைடன் கார்ஸ் 4/46, பென் ஸ்டோக்ஸ் 1/21, கிறிஸ் வோக்ஸ் 1/26)

இங்கிலாந்து: 427/6 (துடுப்பாட்டம்: ஜோ றூட் 106, ஜேக்கப் பெத்தெல் 96,



பென் டக்கெட் 92, ஹரி ப்றூக் 55, பென் ஸ்டோக்ஸ் ஆ.இ 49 ஓட்டங்கள். பந்துவீச்சு: டிம் சௌதி 2/72, மற் ஹென்றி 2/100, கிளென் பிலிப்ஸ் 1/75, வில் ஓ ரூர்க் 1/104)

நியூசிலாந்து: 259/10 (துடுப்பாட்டம்: டொம் பிளென்டல் 115, நாதன் ஸ்மித் 42, டறைல் மிற்செல் 32, டொம் லேதம் 24 ஓட்டங்கள். பந்துவீச்சு: பென் ஸ்டோக்ஸ் 3/5, கிறிஸ் வோக்ஸ் 2/20, பிறைடன் கார்ஸ் 2/53, ஷொய்ப் பஷிர் 2/110, குஸ் அட்கின்ஸன் 1/68)

போட்டியின் நாயகன்: ஹரி ப்றூக்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 09 டிசெம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.